விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

பக்கங்கள்: பத்து

வலம்புரி

Valampurii

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 23 சனிக்கிழமை (05.04.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 108



ஐ.தே.க.எம்.பிக்கள் 10 பேரை அரசுடன் இணைக்கப் பேச்சு!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மேலும் 10 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைவதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்தி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனநாயகக் குழு உறுப்பினரும் அமைச்சருமான ஹேமக்குமார நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் மீதும் அதன் சித்தாந்தங்கள் மீதும் பெரும்பாலான உறுப்பினர்கள் நம்பிக்கை யிழந்துள்ளதாகவும் (10 ஆம் பக்கம் பார்க்க)

மனிதாபிமான உதவிகள் தொடர்பில் மன்னார் ஆயர் ஐ.சி.ஆர்.சியுடன் பேச்சு

(மன்னார்)

மடுப் பிரதேசத்தின் நிலைமைகள் தொடர்பாகவும் மன்னார் கட்டுப்பாட்டற்ற பகுதி மக்களுக்கான மனிதாபிமான உதவிகள் தொடர்பாகவும் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் (ஐ.சி.ஆர்.சி.) பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதன்போது மடு புனித பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையின் காரணமாக அங்கிருந்து பரிபாலகர் உட்பட அனைத்துக் குருக்களும் (10 ஆம் பக்கம் பார்க்க)

மடுவிலிருந்து உடனடியாக விலகுமாறு இராணுவம் - புலிகளிடம் வேண்டுகோள்

முருங்கன் பகுதியில் எறிகணைத் தாக்குதல்

(மன்னார்)

மன்னார் முருங்கன் பகுதியில் நேற்றுக் காலை விடுதலைப்புலிகள் எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

காலை 9.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இவ் எறிகணைத் தாக்குதலில் சில எறிகணைகள் முருங்கன் பொலிஸ் நிலையத்தை அண்மித்த பகுதிகளில் வீழ்ந்து வெடித்துள்ளன. (10 ஆம் பக்கம் பார்க்க)

பாலமோட்டையில் நேற்று மோதல்

(கிளிநொச்சி)

மன்னார் பாலமோட்டைப் பகுதியை நோக்கிப் படையினர் நேற்றுக் காலை 11.45 மணியளவில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கி முன்னேற்ற முயற்சியை மேற்கொண்டதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

முன்னேற முயன்ற படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் கடும் மோதல்கள் (10 ஆம் பக்கம் பார்க்க)

மன்னார் ஆயர் விருத்தார்

(மன்னார்)

மடுப் பகுதியை போர்நிலம் ஆக்காது அப் பகுதியிலிருந்து உடனடியாக விலகிச் செல்லுமாறு மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப், இராணுவம் மற்றும் விடுதலைப்புலிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். மடுப் பகுதியில் இடம்வெற்று வரும் மோதல்கள் குறித்துத் தகவல் தெரிவித்த போதே மன்னார் ஆயர் இதனைத் தெரிவித்துள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)

முகமாலையில் விமானத் தாக்குதல்

(கொழும்பு)

முகமாலைக்குத் தென்கிழக்கேயுள்ள பாதுகாப்புப் படையினரின் முன்னரங்கிற்கு அருகேயுள்ள விடுதலைப்புலிகளின் இனங் காணப்பட்ட இலக்குகள் மீது விமானப் படையினர் நேற்று வான் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

நேற்றுக் காலை (10 ஆம் பக்கம் பார்க்க)

கடசி அங்கத்துவத்திலிருந்து விமல் வீரவன்ச இடைநிறுத்தம்?

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்றக் குழுக்களின் தலைவரும் கட்சியின் பிரசாரச் செயலாளருமான விமல் வீரவன்சவை அக் கட்சியின் அங்கத்துவத்திலிருந்து இடைநிறுத்துவதற்கு கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் களையப்பட வேண்டுமென ஜே.வி.பி. வலியுறுத்தி வந்தபோதும் தேசப் பற்றுள்ள தேசிய இயக்கம் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட கட்சியின் பிரசார செயலாளரான விமல் வீரவன்ச, தமிழ்மக்கள் விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் களையப்படக் கூடாது என்ற கருத்தைத் தெரிவித்திருந்தார். (10 ஆம் பக்கம் பார்க்க)

கிறிஸ்தவ மக்களின் புனித தலத்தை போர்க்களமாக மாற்றுகிறது அரசு

நடேசன் குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

கிறிஸ்தவ மக்களின் புனிதத் தலமான மடுத் தேவாலயம் அமைந்துள்ள பகுதி மீது இராணுவத்தினர் கண்மூடித்தனமான குண்டுத் தாக்குதலை மேற்கொண்டு ஒரு போர்ப் பூமியாக மாற்றி வருகின்றது என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

போர் மரபுகளின்படியும் ஐ.நா. சாசனங்களுக்கு அமைவாகவும் (10 ஆம் பக்கம் பார்க்க)

ரவூவ் ஹக்கீமின் பாதுகாப்பில் எந்த மாற்றமும் செய்யவில்லை

உயர் நீதிமன்றம் அறிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூவ் ஹக்கீமுக்கு வழங்கப்பட்டிருக்கும் பாதுகாப்பில் எந்த மாற்றமும் இல்லை என உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து ரவூவ் ஹக்கீம் விலகியிருப்பதால் அவருக்கான பாதுகாப்பைக் குறைக்க வேண்டும் எனக் கோரி சட்டமா அதிபர், உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொண்ட பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தலைமையிலான நீதிபதிகள் குழு ஹக்கீமின் பாதுகாப்புத் (10 ஆம் பக்கம் பார்க்க)

மிதிவெடி விழிப்புணர்வு தினம் : ஏப்ரல் 1 - 14

யுத்தம் நடைபெற்ற பகுதிகளுக்குச் சிறுவர்களை அழைத்துச் செல்வதைத் தவிர்ப்போம்.

'சர்வோதயம்'

'யுனிசெவ்'

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

க.பொ.த (சா/தர) பரீட்சைப் பெறுபேறுகள் -2007

யாழ்.இந்து மகளிர் கல்லூரி

சுபாஜினி மணிவண்ணன் (10ஏ); கேனகா சித்திராங்கன் (10ஏ); சுதாசினி தங்கராசா (10ஏ) டிலோசனா புலேந்திரன் (9ஏ,பி); ஜெலோனினா தர்மராசா (9ஏ,பி); தயாளினி பாலசுப்பிரமணியம் (9ஏ,பி); கிருஜிகா தெய்வேந்திரம் (9ஏ,பி); ஜீவகி இரட்ணசோதி (9ஏ,பி); சோபிகா கந்தசாமி (9ஏ,பி).

கிருஸ்ணப்பிரியா தேவகிருஸ்ணா(9ஏ,சி) மோகனரஞ்சினி ரவீந்திரன் (9ஏ,சி); ஹம்சிகா தர்மராஜா (8ஏ,2பி); கஸ்தூரி தவரூபன் (8ஏ,பி,சி); ரூபினி இராஜேஸ்வரன் (8ஏ,பி,சி); சரணியா யோகராசா (8ஏ,2பி); சுமங்கலா அருச்சுனன் (8ஏ,2பி); கஜந்தனா அருந்தவராசா (8ஏ,2பி); சிந்துஜா மனோகரன் (8ஏ,2பி); சிறிதேவி சிவஞானசுந்தரம் (8ஏ,2பி); குகப்பிரியா சிவனேஸ்வரன் (8ஏ,பி,எஸ்).

ஜெனோதா ஜெகராஜா (8ஏ,பி,எஸ்); பிரதீபா சிவசோதி (7ஏ,2பி,சி); சௌம்யா இரவீந்திர சர்மா(7ஏ,பி,2சி); நிருத்திகா நேசகுமார் (7ஏ,2பி,சி); தட்சாயினி தனபாலசிங்கம் (7ஏ,2பி,சி); சரண்யா இலட்சுமிசங்கர் (7ஏ,3பி); வேணுகா செல்வராஜா (7ஏ,3சி); சரண்யா சதானந்தன் (7ஏ,பி,சி,எஸ்); ஆதித்தியா இராமநாதன் (7ஏ,2பி,எஸ்).

இராகவேந்தினி ரவீந்திரன் (6ஏ,3பி,சி); சங்காயத்திரி பரமேஸ்வரன் (6ஏ,3பி,சி); யசிதா ஜெயக்குமார் (6ஏ,3பி,சி); தர்சிகா விஜயசந்திரன் (6ஏ,3பி,சி); மாதங்கி ஜெயச்சந்திரன் (6ஏ,பி,3சி); தீபிகா சிறீஸ்கந்தராஜா (6ஏ,3பி,எஸ்); தர்சிகா பரமலிங்கம் (6ஏ,3சி,எஸ்)

பிருந்தா பரமேஸ்வரன் (6ஏ,2பி,2சி); கஜானி ஆனந்தராஜா (6ஏ,2பி,2சி); தர்சிகா தட்சணாமூர்த்தி (6ஏ,2பி,2சி); வாகினி கிருஸ்ணன் (6ஏ,2பி,2சி); மயூரி துரைராஜசிங்கம் (6ஏ,பி,3சி); சாலினி கேதாரநாதன் (6ஏ,2பி,சி,எஸ்); சோபிகா மயில்வாகனம் (6ஏ,2பி,சி,எஸ்); விதுஸ்கரணி திருட்செல்வம் (6ஏ,2பி,சி,எஸ்); கிருபாஜினி யோகராசா (6ஏ,சி,3எஸ்).

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

த.ஆரணியா (10ஏ); உ.பிரணவதர்சன் (9ஏ,பி); ப.பிரசாத் (9ஏ,சி); சி.பவிதா (9ஏ,எஸ்);வி.அரவிந்தன் (9ஏ,எஸ்); த.ஹம்சாலினி (8ஏ,பி,எஸ்); நா.சுவீதனா (8ஏ,சி,எஸ்); மே.ஜோ.ரோஜர்ருவீனஸ் (7ஏ,3பி); சூ.சாரங்கவாணி (6ஏ,3பி,சி); க.ரமணன் (6ஏ,3பி); இ.குகதாசன் (5ஏ,3பி,சி).

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி

கே.விஷ்ணு (10ஏ); கே.மாதுமை (10ஏ); எம்.நர்மதா (8ஏ,2பி); எஸ்.சத்திதஜினி (7ஏ,2பி,சி); டபிள்யூ.சதுசன் (6ஏ,3பி,சி); எஸ்.சாருகி (5ஏ,2பி,3சி); பி.கஸ்தூரி (5ஏ,2பி,3சி); ஆர்.ரஜிந்தன் (5ஏ,2பி,3சி); எஸ்.சாலினி (5ஏ,பி,4சி).

பி.தர்மிலா (4ஏ,5பி,சி); ரி.சாரங்கன் (3ஏ,3பி,2சி,2எஸ்); ஜி.தேவசேனானி (3ஏ,3பி,3சி) ; ரி.நிரோஜிதா (3ஏ,2பி,3சி,2எஸ்); கே.ராதிகா (3ஏ,பி,5சி,எஸ்); கே.அனுசுசியா (3ஏ,பி,3சி,2எஸ்); எஸ்.சஞ்சிகா (3ஏ,4சி,எஸ்); எல்.ருசிபா (3ஏ,4பி,3சி).

மானிப்பாய் மகளிர் கல்லூரி

ரி.ஷஜீதா (9ஏ,சி); கே.ஜெயந்தினி (5ஏ,2பி,3சி); எஸ்.கஜானா (5ஏ,2பி,சி,எஸ்); எஸ்.சுசன்யா (5ஏ,பி.3சி,எஸ்); எம்.நிலானி (4ஏ,4பி,2சி); எஸ்.சாலினி (4ஏ,3பி,3சி); எல்.சர்மிளா (4ஏ,பி,5சி); எஸ்.ரிஷா (4ஏ,3பி,2சி,எஸ்); பி.சஜித்தா (4ஏ,பி,2சி,3எஸ்).

எஸ்.அனுலா (4ஏ,2சி,3எஸ்); ரி.நிலோஜினி (3ஏ,4பி,3சி); என்.சுபாஜினி (3ஏ,பி,4சி,2எஸ்); எஸ்.கீர்த்திகா (3ஏ,3பி,சி,3எஸ்); ஜே.துவாரகா (3ஏ,4பி,2சி,எஸ்); கே.அனித்தா (3ஏ,5சி,எஸ்); பி.லாவண்யா (3ஏ,பி,சி,3எஸ்).

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

பா.சகிலன் (8ஏ,பி,சி); அ.டலிஸ்ரா (7ஏ,3பி); நா.வினோத் (6ஏ,3பி,சி); சோ.பிரணவன் (6ஏ,பி,3சி) ; இ.திசாந்தன் (5ஏ,4பி,எஸ்); ந.சுதர்சன் (5ஏ,3பி,சி,எஸ்); க.தோகினி (5ஏ,2பி,2சி); தே.துஷாந்தன் (5ஏ,2பி, 2சி,எஸ்); சி.ஜீவனா (4ஏ,4பி,சி,எஸ்); சி.சதீஸ் குமார் (4ஏ,3பி,2சி,எஸ்); க.வனஜா (4ஏ,3பி,சி,2எஸ்) த.சஜீவன் (4ஏ,2பி,3சி,எஸ்); ஸ்ரீ.பகீரதன் (4ஏ,பி,4சி,எஸ்); ப.கௌதமி (4ஏ,பி,3சி,எஸ்) ; ம.வஜீபன் (3ஏ,3பி,4சி).

கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்

றஜிதா ஜெயக்குமார் (2ஏ,பி,3சி,3எஸ்); கஜேந்தினி மகாலிங்கம் (ஏ,2பி,2சி,5எஸ்); தக்ஷாயினி திருநாவுக்கரசு (ஏ,பி,3சி,4எஸ்); குழந்தை வேலு கஜலக்ஷன் (ஏ,பி,2சி,4எஸ்); தளையசிங்கம் கஜலக்ஷன் (ஏ,பி,2சி,4எஸ்); சிவபாலன் சிந்துஜன் (ஏ,பி,2சி,4எஸ்); பாஸ்கரலிங்கம் செந்தூரன் (2பி,சி,5எஸ்).

வேலணை மத்திய கல்லூரி

அருட்பிரகாசம் நிரோஜன் (8ஏ,பி,எஸ்); சண்ஜா சோமசுந்தரம்(7ஏ,பி,2சி); பரஞ்சோதி விஸ்ணுகாந்(6ஏ,3பி,எஸ்); துளசிகா மகாலிங்கம்(4ஏ,4பி,2சி); இரட்சநாதன் அருள்ராஜ்(3ஏ,3பி.3சி); சாந்தலிங்கம் தர்சன் (3ஏ,பி,4சி,எஸ்).

அபிரா நாகரத்தினம் (3ஏ, பி,3சி,2எஸ்); சங்கீதா சிறிதரன்(3ஏ,2பி, 4சி);சர்மிளா பொன்னையா(3ஏ,பி,4சி,எஸ்); தேவதாஸ் கபிலன்(2ஏ,2பி,4சி,எஸ்); செல்வநாயகம் லக்ஸ்மன்(2ஏ,பி,4சி) ; கிருத்திகா குகராசா (2ஏ, 3பி,2சி,எஸ்) சுவர்ந்தினி சுதந்திரராசா (2ஏ,3பி,சி,எஸ்).

காரை.யாழ்ற்றன் கல்லூரி

ரமேஸ் (9ஏ,சி); பாலேந்திரன் (7ஏ,பி,2சி); செ.சசிகலா (7ஏ,2பி,எஸ்); யசோதரன் (5ஏ,பி,2சி,2எஸ்).

ரூபவாஹினியின் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் அச்சத்தால் நாட்டை விட்டு வெளியேற்றம்

(கொழும்பு)

ரூபாவாஹினி கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்டநிகழ்ச்சித் தயாரிப்பாளர் ஒருவர்உயிர் அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ரூபவாஹினி தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ரூபவாஹினி ஊழியர்கள் தாக்கப்பட்டுவரும் சம்பவங்கள் தொடர்கின்றன.

இந்த நிலையில் இலங்கையில் தங்கியிருப்பது தனது உயிருக்கு அச்சுறுத்தலானது என்பதால் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளதாக ரூபவாஹினியின் சிரேஷ்ட தயாரிப்பாளர் வருணலெல்வல தெரிவித்துள்ளார்.

மேர்வின் சில்வா மீதான தாக்குதலில் ஈடுபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 21 பேரிடம் விசாரணை நடத்தியுள்ளதாக குற்றத் தடுப்பு புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

21பேரில் நேற்றுமுன்தினம் நாட்டைவிட்டு வெளியேறிய வருணவின் பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் அவருடைய வீட்டுக்கு இரண்டு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இனந் தெரியாத நபர்கள் சென்று அச்சுறுத்தல் விடுத்துள்ளதாகவும் ரூபவாஹினி தொழிற்சங்கப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ச-5)

கொள்ளைக் கோஷ்டி தலைவன் கைது

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய கொள்ளைக் கோஷ்டித் தலைவன் பிடிபட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டு நேற்று மாலை பருத்தித்துறை நீதிவான் கே.அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 9ஆம் திகதி அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இச்சந்தேக நபரை நீண்டகாலமாக தேடி வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-52)

கணனி அலகு ஆரம்ப விழா

(பருத்தித்துறை)

புலோலி புற்றளை மகா வித்தியாலய கணனி அலகு ஆரம்ப விழா அதிபர் மு.அனந்தீஸ்வரன் தலைமையில் எதிர்வரும் 7ஆம் திகதி நடைபெறவுள்ளது.

வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வை.செல்வராஜா பிரதம விருந்தினராகவும் சிறுவர் பாதுகாப்பு நிதிய கல்வித்திட்ட முகாமையாளர் மு.முத்துராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர். (ச-52)

தேர்த்திருவிழா

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகை அம்பாள் ஆலய சப்பறம் இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமை 3 மணிக்கு தேர்த்திருவிழாவும். நாளை மறுதினம் திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (அ-7)

தேசிய கல்வி நிறுவக கல்விமாணி பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவக கல்விமாணி ஆசிரிய மாணவருக்கான மூன்றாம் வருட பரீட்சை எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக பிராந்திய இணைப்பாளர் திருமதி த.வில்வநாதன் அறிவித்துள்ளார்.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தேசிய கல்வி நிறுவகத்தினால் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். (அ)

உயர் தொழில்நுட்பவியல் டிப்ளோமாதாரிகளுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் 2001,2002,2003,2004,2005 ஆண்டுகளில் சித்தி எய்திய மாணவர்களின் டிப்ளோமா சான்றிதழ்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

எனவே மாணவர்கள் பதிவாளருடன் தொடர்பு கொண்டு சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளலாம் என நிறுவன இயக்குநர் ஆர்.ஏ.திலகரட்ணம் அறிவித்துள்ளார்.

மேலும் உயர் தொழில்நுட்ப நிறுவன பழைய மாணவர்களுக்கான ஒன்று கூடல் இன்று காலை 9.00 மணிக்கு நிறுவனத்தில் இடம்பெறும்.

அனைத்து பழைய மாணவர்களும் சமுகம் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். (ச)

திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தேசிய அடையாள அட்டை கிளைத் திறப்பு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணிக்கு பிரதேச செயலர் சி.ஏ.மோகன்ராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கிளைத் திறப்புவிழாவில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கிளையைவைபவரீதியாகத் திறந்து வைக்கவுள்ளார். (ச-134)

பண்டத்தரிப்பு சந்தியூடான போக்குவரத்து ஒழுங்கமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.செயலகத்தில் கடந்த 31ஆம் திகதி யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்களின் தலைமைச் செயலகத்தினை மற்றும் 787,788 வழி சிற்றூர்திச் சங்க செயற்குழுவினருடன் நடைபெற்ற கலந்துரையாடல்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக பண்டத்தரிப்பு சந்தியூடான 787,788 வழியிலான போக்குவரத்துச் சேவை மோட்டார் போக்குவரத்துச் சட்டங்களுக்கு அமைய பின்வரும் ஒழுங்கில் நடைபெறும் என அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

787 வழியில் (மாதகல் -யாழ்ப்பாணம்) செயலாற்றும் சிற்றூர்திகள் பண்டத்தரிப்பு சந்தியில் உள்ள சுற்றுவட்டத்திலிருந்து 50 மீற்றர் தூரத்திற்கு அப்பால் உள்ள பஸ் தரிப்பிடங்களிலேயே பயணிகளை ஏற்ற இறக்க முடியும்.

அதேபோன்று 788 வழியில் (இளவாலை-யாழ்ப்பாணம்) செயலாற்றும் சிற்றூர்திகள் பண்டத்தரிப்பு சந்தியில் உள்ள சுற்றுவட்டப் பாதைக்கு முன் சுமார் 50 மீற்றர் தூரத்திலுள்ள தென்னிந்தியத் திருச்சபைக்கு முன்பாக பயணிகளை இறக்கிவிட்டு சுற்றுவட்டம் வழியே சென்று திரும்பி மீண்டும் சுற்றுவட்டத்திலிருந்து 50 மீற்றர் தூரத்திற்கு அப்பால் உள்ள முத்துமாரி புடைவை அன்பான்சி ஹவுஸுக்கு முன்னால் பயணிகளை ஏற்றிச் செல்லுதல் வேண்டும் என அரச அதிபரின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

பதவி வெற்றிடங்கள் - 2008

பின்வரும் பதவிகளுக்கு மேலதிகமாக ஆட்களைச் சேர்க்கும் வகையில் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன. விண்ணப்பிப்போர்;

- 20-45 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
- யாழ்.நகர மையத்திலிருந்து 7 கிலோமீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர்களாக இருத்தல் கட்டாயமானதாகும்.

○ ஒவ்செற் இயந்திர இயக்குநர்கள், பயிலுநர்கள்
(ஆண்கள்)
நேர்முகத் தேர்வு 05.04.2008 பிற்பகல் 2.30 மணி

○ பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
○ சிற்றூழியர்கள்
நேர்முகத் தேர்வு 06.04.2008 பிற்பகல் 2.30 மணி

தகுதியுடையவர்கள் குறித்த திகதிகளில் நேரில் வரவும்.

இல.3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

நிர்வாக உத்தியோகத்தர்
வலம்புரி

யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்
க.பொ.த. உயர்தர அனுமதி - 2010

மேற்படி கலை,வர்த்தக,கணித, விஞ்ஞான அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. காரியாலயத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று 20.04.2008க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்
வி.மாணிக்கம்
அதிபர்
(C-960)

கூறுவிலை கோரல்

60KW Three phase UPS வழங்குவதற்கான கூறுவிலை தகுதியான வழங்குனரிடமிருந்து வைத்தியசாலைப் பணிப்பாளரினால் கோரப்படுகின்றது. தங்களது கூறுவிலையை 16.04.2008 முற்பகல் 10.00 மணிக்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும். கூறுவிலை தங்கள் முன்னிலையில் 16.04.2008 முற்பகல் 10.30 மணிக்கு திறக்கப்படும்.

பணிப்பாளர்.
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
(C-963)

தவறிவிட்டது

தர்மராசாதர்மேந்திரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (891863241V) 01.04.2008 அன்று திருநெல்வேலிக்கும் கந்தர்மடத்துக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

44/10, மணல்தறைலேன்
கந்தர்மடம்.
J/103 கிராம சேவையாளர் பிரிவு.
T.P:-0776717364

இன்று ஒரு தகவல்

படிப்பும் புத்தியும்

ஒரு மாணவனை படிப்பெல்லாம் எப்படி இருக்கிறது என்று விசாரித்தேன். அவன் அலுத்துக் கொண்டான். "நான் நன்றாகத்தான் படிக்கிறேன்... இருந்தாலும் புத்தியிலே சரியாக ஏறமாட்டேன் என்கிறது''' என்றான். கல்வி கற்கக் கூடிய ஒருமாணவன் சம்பந்தப்படும் புத்திகள் பலவகை அவற்றைப் பற்றி வாரியார் சுவாமிகள் விளக்கியிருக்கிறார்.

மிருத்து புத்தி என்பது ஒன்று. மிருத்து என்றால் மண். மண் சுவரிலே ஆணி அடிப்பதும் சுலபம். அதைப் பிடுங்கி எடுப்பதும் சுலபம். அது மாதிரி சிலர் ஆசிரியர் சொல்லிக் கொடுப்பதை இலகுவாகக் கேட்டுத் தெரிந்து கொள்வார்கள். சிறிது நேரத்திலே சுலபமாக மறந்தும் விடுவார்கள். இது மிருத்து புத்தி.

தாரு புத்தி என்பது இன்னொன்று தாரு என்றால் மரம். பச்சை மரத்திலே ஆணி அடிப்பது சுலபம். ஆனால் அதைப் பிடுங்கி எடுப்பது கஷ்டம். அது மாதிரி ஆசிரியரிடம் கேட்டதைக் கவனமாக மனதில் பதியவைத்துக் கொண்டு அதை மறக்காமல் இருப்பது தான் தாருபுத்தி. பட்டமரமாக இருந்தால் அதில் ஆணி அடிப்பது கஷ்டம். ஆணியும் சீக்கிரம் நழுவி விடும். அது மாதிரி கேட்கிற விஷயம் மனதிலே பதிவது கஷ்டம். அப்படிப் பதிந்தாலும் அது நீடித்திருப் பதும் கஷ்டம்.

இன்னொரு புத்தி ''சிவாபுத்தி'' சிவா என்றால் கல். ஒரு கருங்கல்லிலே நாலு துளையைப் போட்டு, ஒரு துளையிலே உளியை வைத்து அடித்தால் மற்றைய துளை யாவும் பிளந்து கல் இரண்டாகிவிடும். அது மாதிரி சந்தியான இடங்களிலே குறிப்பான ஒரு பொருளைச் சொன்னால் அதைக் கொண்டு மற்றையவற்றையும் தெரிந்து கொள்வது சிவா புத்தி.

வேணு புத்தி என்றால் என்ன தெரியுமா? வேணு என்றால் மூங்கில். மூங்கில் கணுவிலே ஒரு பக்கத்தில் உளி வைத்து அடித்தால் இரண்டு பக்கமும் பிளந்துவிடும். அது மாதிரி ஒரு செய்தியைக் கேட்டுக் கொண்டிருக்கும் வழுதே அதனுடைய முன்–பின் தொடர்புகளையும் தெரிந்து கொள்ள வேண்டும். அது வேணு புத்தி.

தைலபுத்தி என்றும் ஒன்றுண்டு. தைலம் என்பது எண்ணெய். தண்ணீரிலே ஒரு துளி எண்ணெயை விட்டால் அது தண்ணீர் முழுவதும் பரவுவது மாதிரி ஆசிரியர் சுருக்கமாக ஒரு விஷயத்தைச் சொன்னால் அதை வைத்துக் கொண்டே முழு விஷயங்களையும் தெரிந்துகொள்ள வேண்டும். அது தைலபுத்தி.

கற்பூர புத்திபற்றித் தெரியுமா? கற்பூரம் தீப்பட்டவுடன் தீயைப் பிடித்துக் கொள்ளும். ஆசிரியர் சொன்னவுடன் நுண்ணறிவோடு பாடங்களைப் புரிந்துகொள்வது. கரிப் புத்தி என்று ஒன்று! கரியிலே நெருப்பை வைத்து விசிறினால் தான் கரி நெருப்பாகும். அது மாதிரி காலை–மாலை வேளையிலே ஆசிரியர் வந்து பாடம் சொல்லிக் கொடுப்பார். அதைக் கொண்டு புரிந்து கொள்வது இந்தவகை.

கதலித் தண்டுப் புத்தி என்று ஒருவகை உண்டு. கதலி என்பது வாழை மரம். கதலித் தண்டிலே நெருப்புப் பிடிப்பது எவ்வாறு முடியாத காரியமோ அந்த அளவுக்கு முடியாதது அவர் களுக்குப் பிடிப்புச் சொல்லிக் கொடுப்பது.

இவை தவிர இன்னும் சில வகையாகவும் மாணவர் களை இனம் பிரிப்பது உண்டு. ஆசிரியர் சொல்பவற்றில் நல்லதை மட்டும் எடுத்துக்கொள்பவன் அன்னம். ஆசிரியர் கிடைத்த இடத்திலே பாடத்தைக் கேட்டுக்கொண்டு பின் தனியாக உட்கார்ந்து சிந்தித்துப் புரிந்து கொள்பவன் பசு. பசு மாடும் அப்படித்தானே! புல் கண்ட இடத்திலே மேயும். பின் தனியாக நிதானமாக அசை போட்டு தேவையற்றவற்றை வெளியே விட்டுவிடும். ஆசிரியர் சொன்னதை மாத்திரம் சொல்பவன் கிளி. பல இடங்களிலே பாடம் கேட்டு கடைசியில் ஒன்றும் புரியாமல் போகிறவன் ஆடு. ஆடு ஓரிடத்திலும் வயிறார மேயாது. அங்கும் இங்கும் அலையும். சில பேருக்கு எருமை என்று பெயர். எருமை குளத்து நீரைக் கலக்கித்தான் குடிக்கும். அது மாதிரி ஆசிரியர் மனதை நோகச் செய்யும் மாணவர்கள் இந்த ரகம்.

"அன்னம், ஆவே, மண்ணொரு கிளியே
இல்லக் குடமாம் எருமை நெய்யரி
அன்னவன் தலை, இடை, கடை மாணாக்கர்"
என்றார் பவனந்தி முனிவர்.

இவ்வளவெல்லாம் இருந்தாலும் இந்தக் காலத்து மாணவர்கள் ஒரு தனி ரகம். ஓர் ஆசிரியர் வகுப்பிலே பாடம் நடாத்திக் கொண்டிருந்தார்– இலக்கண வகுப்பு இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் பற்றிப் பாடம் நடத்திவிட்டு ''இப்பொழுது நான் ஒரு வாக்கியம் சொல்வேன். அது என்ன காலம் என்பதை நீங்கள் சொல்ல வேண்டும்'' என்றார் ஆசிரியர். மாணவர்கள் சரியென ஒப்புக்கொண்டார்கள். "நான் நாளைக்கு பாடம் நடத்தப் போகிறேன்'' இது என்ன காலம் என்று கேட்டார் ஆசிரியர்.

''இது எங்கள் போதாத காலம் சார்'' என்றான் ஒரு மாணவன்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

கன்னட தீவிரவாத அமைப்புகளைக் கண்டித்து தமிழ்த்திரை உலகம் உண்ணாவிரதப் போராட்டம்

ரஜனி உட்பட ஏராளமானோர் பங்கேற்பு

(சென்னை)

ஒகேனக்கல் குடிநீர் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வரும் கன்னட தீவிரவாத அமைப்புகளை கண்டித்து தமிழ் திரையுலகமே போர்க் கோலம் பூண்டு சேப்பாக்கத்தில்

நேற்று உண்ணாவிரதம் மேற் கொண்டது.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் ரஜனிகாந்த் உள்ளிட்ட ஏராளமான முன்னணி நடிகர் களும் நடிகையர்களும் தொழில் நுட்ப கலைஞர்களும் கலந்து கொண்டனர்.

ஒகேனக்கல் குடிநீர் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எதிர்ப்பு தெரி வித்தும் அப்பகுதி தங்கள் மாநிலத் திற்கு சொந்தமானது என்று கூறி யும் கன்னட அமைப்புகள் கடந்த சில தினங்களாக கலவரத்தில் ஈடு பட்டு வருகின்றன.

பெங்களூர் உள்ளிட்ட கர்நாடகத்தின் பல்வேறு இடங்களில் உள்ள தமிழ் வர்த்தக நிறுவனங் கள் மீதும், தமிழ்ச் சங்கதின் மீதும் தாக்குதல் நடத்தி சேதம் விளைவித் தனர்.

தமிழ் திரைப்படங்கள் ஓடும் தியேட்டர்கள் மீதும் வன்முறை களை கட்டவிழ்த்துவிட்டு தமிழ் திரைப்படங்கள் மற்றும் தமிழ் தொலைக்காட்சிகள் ஒளிபரப்பை யும் நிறுத்திவிட்டனர்.

இதற்கு தமிழ் திரையுலகத்தின் சார்பில் கண்டனம் தெரிவிக்கும் வகையில் முதல்கட்டமாக உண் ணா விரதப் போராட்டம் நடத்த தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம் மற்றும் தென்னிந்திய நடிகர் சங்கத் தின் அவசர ஆலோசனை கூட்டத் தில் முடிவு செய்யப்பட்டது.

அதன்படி நேற்று காலை 8 மணிக்கு சென்னை சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை அருகே தமிழ் திரையுலகத்தினரின் உண் ணாவிரதப் போராட்டம் தொடங்கி யது.

60 அடி அகலத்திலும் 30 அடி நீளத்திலும் உண்ணாவிரத மேடை அமைக்கப்பட்டிருந்தது. இதில் ஏறத்தாழ 1500 இருக்கைகள் போடப்பட்டிருந்தன. பிலிம்சேம்பர் தலைவர் கே.ஆர்.ஜி.தயாரிப்பாளர் சங்கத் தலைவர் ராமநாராயணன் ஆகியோர் இந்த உண்ணா விரதப் போராட்டத்திற்கு தலைமை தாங்கி னார்கள். நடிகர் சங்க பொதுச் செய லாளர் ராதாரவி வரவேற்புரை யாற்றி தொகுப்புரை வழங்கினார்.

உண்ணாவிரதத்தை துவக்கி வைத்து கே.ஆர்.ஜி.பேசும் போது சகோதரர்களுக்கிடையே சண்டை கூடாது என்பதையே இந்த உண் ணா விரதத்தின் மூலம் கன்னட மக் களுக்கு தெரிவித்து கொள்ள விரும்பும் செய்தி என்றும் கூறினார்.

இதில் பேசுபவர்கள் கலையு லகம் குறித்து மட்டுமே பேச வேண் டும் என்றும், அரசியல் குறித்து பேசக்கூடாது என்றும் அதனை முதலமைச்சர் கருணாநிதி பார்த் துக்கொள்வார் என்றும் அவர் குறிப் பிட்டார்.

கலையுலகத்தைத் தொடர்ந்து இது போல துன்புறுத்த கூடாது என்று கேட்டுக்கொண்ட அவர் இனியும் இது போன்ற சம்பவங்கள் தொடர்ந்தால் அதற்கான விளைவு களை சந்திக்க வேண்டியிருக்கும் என்றும் எச்சரித்தார்.

இந்த உண்ணாவிரதத்தில் நடி கர் சங்கத்தலைவர் சரத்குமாருடன் நடிக, நடிகைகள், இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், இசையமைப் பாளர்கள் மற்றும் தமிழ் திரையுல கத்தின் ஸ்டண்ட், டப்பிங் உள்ளிட்ட 24 சங்கங்களைச் சேர்ந்த ஏராள மான கலைஞர்கள் கலந்து கொண் டனர். உண்ணாவிரதப் போராட் டத்தை முன்னிட்டு விரிவான பாது காப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டி ருந்தன.

தமிழ்திரை உலகத்தின் இந்தப் போராட்டத்தின் ஒரு பகுதியாக மாநிலம் முழுவதும் தியேட்டர்களில் காலை மற்றும் பகல் காட்சிகள் ரத்துச்செய்யப்பட்டிருந்தன.

இந்தப் போராட்டத்தில் பேசிய ரஜனிக் காந்த், சத்தியராஜ் ஆகி யோர் இலங் கை மக்களுக்காகக் குரல் கொடுத்தமை குறிப்பிடத் தக்கது. (அ–5)

இராசிபலன்

05.04.2008
(பங்குனி 23, சனிக்கிழமை)
உத்தரட்டாதி முன்னிரவு11.19மணிவரை
சதுர்த்தசி முற்பகல்11.38 மணி வரை
இராகுகாலம் 09.08-10.38 மணிவரை
சுபநேரம்-03.08-04.38 மணிவரை
குழந்தை வேற்சுவாமி குருபூசை
அமாவாசை விரதம்

மேடம்	சோம்பல் நிலை, குடும்பக் கவலை, முயற்சி தாமதம்.
இடபம்	நண்பர்கள் உதவி, குடும்ப சுகம், சயனசுகம், தனவருவாய்.
மிதுனம்	எடுத்த கருமங்கள் கைகூடும், நன் கொடை, அதிகாரம், பிறர்உதவி.
கடகம	எதிர்பாராத செலவு, பிரயாணம், தொழில் மந்தநிலை, வீண்பயம்.
சிங்கம்	கடன்பிரச்சினை, வாகனபயம், காரிய தடங்கல், தர்மம்.
கன்னி	மனோதைரியம், சென்ற இடத்தில் செல்வாக்கு, தொழில் நன்மை.
துலாம்	அதிகபிரயாசை, போசனநன்மை, சத்துருஜெயம், உடல்நலம்.
விருச்சிகம்	காரிய இடையூறு, புத்திரரால் கவலை, பூர்வபுண்ணிய கருமம்.
தனுசு	மனச்சஞ்சலம், முயற்சி தாமதம், போசனசுகம், சுபசெலவு.
மகரம்	பிரயாண நன்மை, காரிய சித்தி, கீர்த்தி, உறவினர் உதவி.
கும்பம்	கடினவார்த்தை எடுத்த காரியம் தாமதமாகும், தனவிரயம்.
மீனம்	சிந்தனை மிகுதி, நல்ல முயற்சி, கலந்துரையாடல், போசனசுகம்.

வளவன்

சம்பளத்துக்கு அங்கத்தவர்களை சேர்க்கும் நிலைக்கு புலிகள் பலவீனம் அடைந்துள்ளனர்

பலாலி பாதுகாப்பு தலைமையகம் தெரிவிப்பு

தற்போது பணத்திற்காக அங் கத்தவர்களை இணைத்துக் கொள் ளுமளவிற்கு எல்ரீரீஈ அமைப்பு பல வீனமடைந்துள்ளது.

எல்ரீரீஈ அமைப்பு தனது ஆட் பலத்தை இழந்துள்ள காரணத்தால் பாதுகாப்புப் படையினரின் தாக்கு தல்களுக்கு முகம் கொடுக்க தமது இயக்கத்திற்குத் தேவையான அங்கத்தவர்கள் இன்மையால் மாதச்சம்பளம்வழங்கியேனும்உறுப் பினர்களை இணைத்துக் கொள் ளும் உபாயத்தை மேற்கொண்டுள் ளனர்.

தமிழ் மக்களின் ஒரே மீட்பாளர் கள் தாமென்று கூறி வரும் புலிகள் இயக்கம் மீது தமிழ் மக்கள் எவ்வித நம்பிக்கையும்கொண்டிருக்கவில்லை என் பது இதன் மூலம் தெளிவாகிறது. இவ்வாறு பலாலிப் பாதுகாப்புப் படைத் தலைமையகம் 'வேலை வாய்ப்பு வெற்றிடங்கள் மாதச் சம் பளம் ரூபா 10,000' என்ற தலை யங் கத்தின் கீழ் பத்திரிகைகளுக்கு அனுப் பிவைத்துள்ள செய்தியில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அக்குறிப்பில் மேலும் தெரிவிக் கப்பட்டுள் ளதாவது.

அப்பாவி மக்களை ஏமாற்றி மார் தட்டிக் கொண்டிருந்த எல்ரீரீஈ இயக் கத்திற்கு இன்று உறுப்பினர்களை இணைத்துக் கொள்வதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக தமிழ் இளை ஞர், யுவதிகளுக்கு மாதாந்தச் சம்பளமாக பத்தாயிரம் ரூபா வழங் குவதாக உறுதியளித்து இணைத் துக் கொள்ள முயற்சித்து வருகின் றனர்.

என்றாலும் எல்ரீரீஈ இயக்கத் தின் நெருக்குதல்களுக்கு மத்தியில் வாழும் வேலையற்றவர்களை பணத்திற்கேனும் சேர்த்துக் கொள்ள முற்பட்டாலும் அவர்கள் அதற்கு முன் வருவதில்லை. மேலும் இவ் வாறு இணைவோருக்கு மோட் டார் சைக்கிளொன்றை வழங்க முன் வந்துள்ள எல்ரீரீஈ இயக்கத்தின் பல வீனத்தைஉணர்ந்துகொள்ள இதுவே போதுமானதாகும்.

இதன் படி இதுவரை காலமும் பலவந்தமாகவும் கடத்திச் சென்றும் உறுப்பினர்களை இணைத்துக் கொண்டபுலிகள் இயக்கத்திற்கு அம் முயற்சியும் தோல்வியடைந்ததால் இந்த புதிய உக்தியை கையாள வேண்டி ஏற்பட் டுள்ளது.

அத்துடன் கடத்திச் செல்லப்பட்ட இளைஞர், யுவதிகளும், சிறுவர் களும் பெருமளவில் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்து வருவ தாலும் அவர்களின் சதி வலையில் ஓட்டை விழுந்துள்ளது.

தமிழ் மக்கள் எல்ரீரீஈ இயக்கத் திடம் ஏமாற்றமடைந்திருந்த காலப் பகுதியில் அங்கத்தவர்கள் இயக்கத் தில் இணைய முன் வந்தாலும் அவர்கள் மேற்கொள்வது மோசடி என்பதை விளங்கிக்கொண்ட மக்கள் அவர்களிடமிருந்து விலக ஆரம்பித் துள்ளனர்.

தமது இருப்புக்காக தமது பிள்ளைகள் பலியிடப்படுகின்றனர் என்பதைஉணர்ந்துகொண்டமக்கள் இனி ஒருபோது ஒத்துழைப்பு வழங்க மாட்டார்கள் என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

இருக்கும் உறுப்பினர் களின் எண்ணிக்கையும்நாளுக்கு நாள் வீழ்ச் சியடைந்து வருவதுடன் தொடர்ந் தும் அவர்களால் இருப்புக் கொள்ள முடியாமல் போயுள்ளதுடன் அடுத்து வரும் மாதங்களில் எல்ரீரீஈ இயக் கம் முழுமையாக கரைந்து விடும் நிலைக்குதள்ளப்பட்டுள்ளது.

அதன் பின்னர் வன்னி மக்கள் தமது விருப்பப்படி ஜனநாயக முறை யில் தமது தலைவரை தேர்ந் தெடுத்து சுதந்திர வாழ்வை அனு பவிக்க சந்தர்ப்பம் ஏற்படும். (அ)

சேதனப் பயிர்ச்செய்கை

சேதனப் பயிர்ச்செய்கை என்பது பழமை வாய்ந்த விவசாயத்தின் அனுபவத்துடன் கூழலில் உள்ள இயற்கை வளங்களைப் பயன்படுத்தி சூழலுக்கு பாதிப்பேற்படாத வாறு பொருத்தமான தொழில் நுட்பமுறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கை ஆகும். இம்முறையில் மண் அரிப்பைக் குறைத்து மண்வளத்தைப் பேணுவதுடன் மண்ணில் நீரும், காற்றோட்டமும், பயிர்ப் போசனைப் பொருட்களும் தங்கி நிற்கக் கூடிய வகையில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும். இங்கு விவசாய இரசாயனப் பொருட்கள் மற்றும் செயற்கை உரங்கள் என்பன வற்றின் பாவனையின்றி எல்லாக் கழிவுகளையும் மீள் சுழற்சிக்கு உட்படுத்தி உபயோகப்படுத்துவதுடன் உயிரினங்களின் பல்வகைத் தன்மையைப் பேணுவதிலும் உயர் கவனம் செலுத்தப்படும். இச்செயற்பாடுகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் நஞ்சற்ற, ஆரோக்கியமான உட்கொள்ளப் பொருத்தமான உணவு வகைகளை உற்பத்தி செய்யமுடியும்.

கூடை முறையில் கூட்டெரு தயாரிப்பு

பசுமைப் புரட்சியின் விளைவுகள்

கடந்த கால வரலாற்றை நோக்கினால் 'பசுமைப் புரட்சி'யின் விளைவாக உயர் விளைவு தரும் பயிர் வர்க்கங்கள் விவசாயத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன. அத்துடன் தனிப் பயிர்ச்செய்கைக்கு வழிவகுத்ததுடன் விவசாய இரசாயனங்கள், செயற்கை உரங்கள், விவசாய இயந்திரங்கள் என்பவற்றின் அதிகரித்த பாவனைக்கும் இட்டுச் சென்றது. பசுமைப் புரட்சியினால் பசுமையான விளைவுகள் தோற்றுவிக்கப்படவில்லை. மாறாக சூழலுக்கு பாதகமான மண் அரிப்பு, மண் உவராதல், நீர் மாசடைதல், உயிர்ப் பல்வகைத் தன்மையின் இழப்பு, பீடை கொல்லிகளினதும் நுண்ணுயிர் கொல்லிகளினதும் மீதிகள் உணவுடன் சேர்தல் போன்ற விளைவுகளே தோற்றுவிக்கப்பட்டன.

யாழ்.மாவட்ட விவசாயச்செய்கையும் இதற்கு விதிவிலக்கல்ல. இங்கும் விவசாய செய்கையில் விவசாய இரசாயனங்களினதும் செயற்கை உரங்களினதும் மட்டற்ற பாவனையால் நஞ்சூட்டப்பட்ட காய்கறிகளை உணவாக உட்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு யாழ்.மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். இதனால் இருதயநோய், நுரையீரல் அழற்சி, சிறுநீரக அழற்சி மற்றும் கருப்பையில் நோய்கள் என்பன மக்களை பாதிக்கத் தொடங்கியுள்ளன.

இந்நிலையை மாற்றியமைக்க படிப்படியாக யாழ்.மாவட்டத்தில் சேதனப் பயிர்ச்செய்கையை விரிவாக்க வேண்டிய தேவை தற்போது தோன்றியுள்ளது. மண்ணின் நீண்ட கால வளத்தை மேம்படுத்தவும் இயற்கை வளங்களின் மிதமிஞ்சின பாவனையைத் தடுத்து சூழலை மாசடையாது பாதுகாப்பதற்கும் மீள் புதுப்பிக்கமுடியாத சக்திவளங்களினதும் ஏனைய வளங்களினதும் பாவனையைக் குறைப்பதற்கும் பாதுகாப்பானதும் ஆரோக்கியமானதுமான சூழலுக்கு போதிய எவு வளங்களை மீளச் சேர்ப்பதற்கு போசனை நிறைந்த ஆரோக்கிய மான உயர்தரமுள்ள உணவுப்

மண்புழுக் கூட்டெரு தயாரிப்பு

பொருட்களை போதியளவு உற்பத்தி செய்வதற்கும் இயற்கையான நிலத் தோற்றத்தையும் விவசாயச் சூழற் தொகுதியை மேம்படுத்தி பேணுவ தற்கும் பாரம்பரிய விவசாய அறிவு


கூடை முறையில் கூட்டெரு தயாரிப்பு

ரைகளை அங்கீகரிப்பதற்கும் சேதனப் பயிர்ச்செய்கையை முன்னெடுத்தல் அவசியமானபடிமுறையாகும்.

கூடை முறையில் கூட்டெரு தயாரிப்பு

செவ்வக வடிவில் கூடையை அமைப்பதாயின் 10'X4'X5' அல்லது வட்டவடிவம் எனில் 4' விட்டமும் 5' உயரமும் கொண்ட கூடையை தடிகள், கயிறு ஆகியவற்றைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. சேதனக் கழிவுகள் தொடர்ச்சியாக கூடையினுள்சேர்க்கப்படுகின்றன. காய்ந்திருந்தால் மட்டும் நீர் தெளிக்கப்படுகின்றது. தடிகள் காய்ந்திருப் பின் அவற்றை அகற்றி புதிய தடிகள் நடப்படுகின்றன. கழிவுகள் உக்கல் அடைந்த பின்னர் தேவைக்கேற்ப தடிகளை உயர்த்தி கீழ் பகுதியில் பசளையை எடுத்துக் கொள்ளலாம். சிறந்தமுறையில் தடிகளை நட்டு பராமரித்தால் சுமார் 1-1 1/2 வருடங்களுக்கு கூடையை கூட்டெரு தயாரிப்பிற்காக பயன்படுத்த முடியும் 1 1/2 மாத காலப்பகுதியில் கூட்டெருவைப் பெற்றுக் கொள்ள முடியும்.

கூட்டெரு தயாரிப்பில்,

அ. போதிய காற்றோட்டம்

ஆ. போதிய ஈரலிப்பு என்பன முக்கியமாக பேணப்படவேண்டிய காரணிகளாகும்.

மண் புழுத் திரவம் தயாரித்தல்

எமது சூழலில் காணப்படுகின்ற மண்புழுக்களை முறையாகத் தயாரிக்கப்பட்ட பரலில் வளர்த்து அவைகள் வெளியாக்கும் கழிவே மண் புழு திரவமாகும். புண்புழு திரவமானது கூடியளவு நுண்போசனை மூலகங்களைக் கொண்டுள்ளது. இத்திரவத்தின் 1 பங்கிற்கு 5 பங்கு நீர்சேர்த்து அக்கலவையை பயிர்களின் வளர்ச்சிப் பருவத்தில் மாலை நேரங்களில் தெளிக்கும் முறை காணப்படுகின்றது. இம்முறை அதிக செலவாகாது. தொடர்ச்சியாக உற்பத்தியுண்டு. ஒரு வருடம் வரை இவ் அமைப்பை பயன்படுத்த முடியும்.

மண்புழு கூட்டெரு தயாரிப்பு

மண்புழு கூட்டெரு தயாரிப்பானது 4'X4'X3' பரிமாணங்களைக் கொண்ட நான்கு தொட்டிகளாகும். ஒவ்வொரு தொட்டிகளுக்கு மிடையில் இடைத்தொடர்புகள் உண்டு. முதலாம் தொட்டியில் குப்பை கழிவுகளை யிட்டு 1 1/2 மாதங்களின் பின்னர் அதனுள் மண் புழுவை இடவேண்டும். ஒவ்வொரு மண்புழுவும் ஒருமாதத்தல் 10 குட்டிகளை உருவாக்கும்.

முதலாம் தொட்டி நிரம் பியவுடன் ஒழுங்கு முறைப் படி 2ஆம், 3ஆம், 4ஆம் தொட்டிகள் நிரப்பப்படும். இம் முறையில் சேதனக் கழிவுகளை

மண்புழுத் திரவம் தயாரிப்பு

படைபடையாக இடத் தேவையில்லை. அத்துடன் புரட்டுதலும் அவசியமில்லை. இம்முறையானது விவசாயிகளை பெரிதும் கவர்ந்தது.

இவற்றைவிட பசியசாணம், கிளிசிறியா இலைகள் என்பவற்றில் இருந்து திரவப் பசளை தயாரித்து பயிர்களுக்கு மாலை வேளைகளில் விசிறப்படுகின்றது. வேலிகளில் அகத்தி, ஆடாதோடை, பாவட்டை, இப்பில்இப்பில், கிளிசிறிடியா போன்ற மரங்கள் நடப்பட்டு அங்கு மரங்களின் பல்வகைத் தன்மை பேணப்பட்டு வருகின்றன. அத்துடன் சேர்க்கை பண்ணப்பட்டுள்ள பயிர்களும் தனிப் பயிராக செய்கை பண்ணப்படாது கரட், பீற்றூட், தக்காளி, வெங்காயம், கோவாவகைகள் எனப் பயிரிடப்பட்டு பயிர் பல் வகைத் தன்மை பேணப்பட்டு காணப்படுகிறது. இதன் மூலம் பயிர்களில் ஏற்படக்கூடிய நோய் பீடைத் தாக்கங்களை இலகுவில் கட்டுப்படுத்தப்படுகின்றது. அத்துடன் ஏதாவதொரு பயிரில் எதிர் பாராத விதமாக இழப்பு ஏற்படும் பட்சத்தில் அவ் இழப்பு ஏனைய பயிர்களின் மூலம் ஈடு செய்யப்படுகின்றது.

வி. இளங்குமார்
விவசாயக் கண்காணிப்பு உத்தியோகத்தர்
பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம் (சிரேஷ்ட)
யாழ்ப்பாணம்.


மண்புழுக் கூட்டெரு தயாரிப்பு

யா/வேலணை மத்திய கல்லூரி - வேலணை க.பொ.த.(சா/த) பரீட்சை 2007

சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

இல	பாடங்கள்	A	B	C	S	W	தோற்றியோர்	சித்தி	சித்தி%
1.	சமயம்	22	11	14	07	02	56	54	96.42%
2.	தமிழ்	04	05	15	20	12	56	44	78.57%
3.	ஆங்கிலம்	-	-	02	04	50	56	06	10.71%
4.	கணிதம்	04	07	07	20	18	56	36	64.28%
5.	விஞ்ஞானம்	02	01	10	17	26	56	30	53.57%
6.	சமூகக்கல்வி	06	10	16	23	01	56	55	98.21%
7.	சித்திரம்	-	01	01	07	03	12	09	75.0%
8.	சங்கீதம்	08	06	06	08	06	34	28	82.35%
9.	நடனம்	05	03	02	-	-	10	10	100%
10.	விவசாயம்	-	02	12	16	07	37	30	81.08%
11.	கணக்கீடு	02	01	04	09	02	18	16	88.88%
12.	மனையியல்	-	-	-	01	-	01	01	100%
13.	அபிவிருத்திக்கல்வி	01	05	04	26	20	56	36	64.28%
14.	சுகாதாரம்	09	13	16	15	03	56	53	94.64%

தோற்றிய மாணவர் எண்ணிக்கை : 56
சித்தி வீதம் : 64.28%

உயர்பெறுபேறு பெற்ற மாணவர் விபரம்

1. செல்வன் அருட்பிரகாசம் நிரோஜன் -8A 1B 1S
2. செல்வி சண்ஜா சோமசுந்தரம் -7A 1B 2C
3. செல்வன் பரஞ்சோதி விஸ்ணுகாந் -6A 3B 1S
4. செல்வி துளசிக்கா மகாலிங்கம் -4A 4B 2C
5. செல்வன் இரட்சநாதன் அருள்ராஜ் -3A 3B 3C
6. செல்வன் சாந்தலிங்கம் தர்சன் -3A 1B 4C 1S
7. செல்வி அபிரா நாகரத்தினம் -3A 1B 3C 2S
8. செல்வி சங்கீதா சிறிதரன் -3A 2B 4C
9. செல்வி சர்மிளா வொன்னையா -3A 1B 4C 1S
10. செல்வன் தேவதாஸ் கபிலன் -2A 2B 4C 1S
11. செல்வன் செல்வநாயகம் லக்ஸ்மன் -2A 1B 4C
12. செல்வி கிருத்திகா குகராசா -2A 3B 2C 1S
13. செல்வி சுவர்ந்தினி சுதந்திரராசா -2A 3B 1C 1S

யா/வேலணை மத்திய கல்லூரி

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பாடசாலை பழைய மாணவர் சங்கம்,
(தாய்சங்கம் கொழும்பு, பிரான்ஸ், லண்டன், கனடா, அவுஸ்திரேலியா.)

(சி-958)

பிரதமராகப் புட்டின் மே மாதம் பதவி ஏற்பார் -சபாநாயகர் தெரிவிப்பு

(மொஸ்கோ)

ரஷ்ய ஜனாதிபதியாக தமிழ்ரி மெட்வே டேவ் பதவியேற்றவுடன் விளாடிமிர் புட்டின் பிரதமர் பதவிக்கான வாக்கெடுப்பிற்கு உட் படுத்தப்படுவார் என அந்த நாட்டின் பாராளு மன்ற சபாநாயகர் போரிஸ் கிரைஸ் லோவ் தெரிவித்தார்.

'இன்டர்பக்ஸ்' செய்தி முகவர் நிலையத் துக்கு அளித்த பிரத்தியேக பேட்டியிலேயே போரிஸ் கிரைஸ்லோவ் இவ்வாறு கூறினார்.

எதிர்வரும் மே 8 ஆம்திகதி, மெட்வேடே வின் பதவிப்பிரமாணம் இடம்பெற்று ஒரு நாள் கழித்து பிரதமர் பதவிக்காக விளாடிமிர் புட்டினை உறுதிப்படுத்தும் நிகழ்வு இடம்பெறு மா என ஊடகவியலாளரால் வினவப்பட்ட கேள் விக்கு போரிஸ் கிரைஸ் லோவ் பதிலளிக்கை யில், "ஏன் அதனைத் தாமதப்படுத்த வேண் டும்?" என வினவினார்.

எதிர்வரும் மே 8 ஆம்திகதி சனட் சபை உறுப்பினர்களும் பிரதிநிதிகளும் சந்தித்து விளாடிமிர் புட்டினை பிரதமர் பதவி வேட்பாளர் நியமனத்துக்கு ஆதரவு வழங்குவார்கள் எனத் தான் நம்புவதாக அவர் கூறினார்.

ரஷ்ய அரசியலமைப்பின் பிரகாரம் விளா டிமிர் புட்டின் பிரதமர் பதவிக்கான வேட்பாள ராக ரஷ்ய பாராளுமன்ற கீழ் சபையில் முன் மொழியப்பட்டு, அவரது வேட்பு மனுவின் அங்கீகாரத்தின் பொருட்டு வாக்கெடுப்பு ஒன் றுக்கு உட்படுத்தப்பட நேரிடும் என்பது குறிப் பிடத்தக்கது.

கடந்த மார்ச் 2 ஆம் திகதி நடைபெற்ற ரஷ்ய ஜனாதிபதி தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்ற தனது நெருங்கிய நண்பரான மெட் வேடவின் ஆட்சியின் கீழ், விளாடிமிர் புட்டின் கணிசமான அதிகாரங் களைப் பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் விளாடிமிர் புட்டினின் ஆதரவுக் கட்சி பாராளுமன்றத்தில் பெரும்பான்மை யைப் பெற்றுத் திகழ்வதால், அவர் பிரதமர் பதவிக் கான வாக்கெடுப்பில் வெற்றிபெறுவது உறுதிப்



படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது.

அரசியலமைப்பு சட்டமொன்றின் பிர காரம் ஏற்கனவே இரு தடவைகள் ஜனாதிபதி பதவிப்பொறுப்பை வகித்த விளாடிமிர் புட்டின், மூன்றாவது தடவையாகவும் தொடர்ச்சியாக ஜனாதிபதி பொறுப்பை வகிக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-5)

ஈராக்கில் இருந்து ஜூலை மாதத்துக்குள் ஐந்து இராணுவ படைப் பிரிவுகள் வாபஸ்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் 5 படைப்பிரிவுகள், ஈராக்கில் இருந்து வாபஸ் பெறப்படுகின்றன.

ஈராக் நாட்டில், அமெரிக்கா மற்றும் நேச நாட்டு படைகள் முகாமிட்டு, அதன் அதிபர் சதாம். உசேனை கைது செய்தது தெரிந்த தே.அதன்பின் நீதிமன்ற தீர்ப்பின்படி அவர் தூக்கில் போடப்பட்டார்.

தற்போது அங்கு இருக்கும் ஆட்சிக்கு துணையாக,சட்டம்-ஒழுங்கை நிலைநாட்ட, அமெரிக்க இராணுவம் உதவி செய்து வரு கிறது. ஈராக்கில், இந்தப் பணியில் ஈடுபடும் அமெரிக்க இராணுவத்தினர், உயிர் இழக்கும் சம்பவங்களும் நடக்கிறது.

இதற்கிடையில், ஈராக்கில் இருந்து அமெ ரிக்க படையை வாபஸ் பெறவேண்டும் என்ற கோரிக்கை, அமெரிக் காவில் அதிகரித்து வருகிறது.

இதுபற்றி வோஷிங்டன் நகரில் உள்ள இராணுவ தலைமை இடமான பென்டகன் அலுவலகத்தில், இராணுவ அதிகாரிகளின் குழுத்தலைவர் ஆடம் மைக் முல்லன், நிருபர் களிடம் கூறியதாவது,

ஈராக்கில், அமெரிக்க இராணுவம் சிறப் பான பணிகளை செய்து வருகிறது. அங்கி ருந்து இராணுவத்தை படிப்படியாக வாபஸ் பெறவேண்டும் என்று கொள்கை அடிப்படை யில் முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது.

இதன்படி ஏற்கனவே சில படைப்பிரிவுகள் வாபஸ் பெறப்பட்டுள்ளன.

வருகிற ஜூலை மாதத்துக்குள், மேலும் 5 இராணுவ படைப் பிரிவுகள், ஈராக்கில் இருந்து அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்படும்.

வன்முறை நீடித்தாலும்

ஈராக்கில், பஸ்ரா, பக்தாத் நகர்களில் சமீபத்தில் வன்முறை சம்பவங்கள் அதிகரித் துள்ளன. வன்முறை நீடித்தாலும், எங்கள் முடிவில் மாற்றம் இல்லை. இனி அங்கு அமைதியை நிலைநாட்ட வேண்டியது, அங்கு தற்போது இருக்கும் ஆட்சியின் பொறுப்பு.

ஈராக்கில் தொடர்ந்து வன்முறை நீடித்து உயிர் பலி அதிகரித்தால், அப்போது இருக் கும் நிலையை நாங்கள் பரிசீலித்து முடிவு எடுப்போம் என்று மைக் முல்லன் கூறினார்.

அடுத்த வாரம், அமெரிக்க செனட்டில் ஈராக்போர் பற்றிய நிலை பற்றி, அமெரிக்கா வின் இராணுவ தலைமை அதிகாரி டேவிட் பீட்டி ரஸ் விளக்கி பேசுகிறார்.

இதற்கு முன்னோ டியாக இராணுவம் வாபஸ் பெறும் தகவல் அறிவிக் கப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது. (அ-5)

உலக தரிசனம்

20இலட்சம் குழந்தைகளுக்கு எச்.ஐ.வி.

(ஜெனீவா)

2007ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக் கீட்டின் படி உலகம் முழுவதும் சுமார் 20 இலட் சத்திற்கும் அதிகமான குழந்தைகள் எச்.ஐ. வியால் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடு கள் சபையின் ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. 15 வயதுக்கும்குறைவான சுமார் 2 இலட்சத்து 90 ஆயிரம் குழந்தைகள் கடந்தாண்டு எய்ட்ஸ் நோயால் பலியானதாக அந்த ஆய்வறிக்கை மேலும் தெரிவிக்கிறது. ஆபிரிக்காவின் சகாரா பாலைவனத்தை சுற்றியுள்ள சில நாடுகளில் மட்டும் ஒரு கோடியே 21 இலட்சத்துக்கும் அதிக மான குழந்தைகள் தங்கள் தாய் அல்லது தந்தையை இந்நோயின் காரணமாக இழந்தி ருக்கிறார்கள். (அ-5)

விமான விபத்தில் 19பேர் பலி

(பரம்மரிபோ)

சுரினாம் நாட்டின் பரம்மரிபோ நகரில் இருந்து 19 பயணிகளுடன் புறப்பட்ட விமா னம் விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த அனைவரும் பலியாகியிருப்பர் என அஞ்சப்படுகிறது. இரட்டை என்ஜின் கொண்ட ஆன்டனோவ் ஏ-28 வகையைச் சேர்ந்த இவ் விமானத்தில் எத்தனை பயணிகள் இருந்த னர் என்பது சரியாக தெரியவில்லை என சுரி னாம் விமானப் போக்குவரத்துத்துறை அதி காரி ஒருவர் தெரிவித்தார். (அ-5)

முஷாரப் சீனா பயணம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அதிபர் முஷாரப், புதிய அரசு பதவி ஏற்ற பிறகு முதல் முறையாக சீனா செல்கிறார்.

அவர் வருகிற 10ஆம் திகதி 6நாள் சுற்றுப் பயணமாக அங்கு செல்கிறார்.

அவருடன் வெளிநாட்டு மந்திரி ஷா மெக்மூத் குரேஷி, இராணுவ மந்திரி சவுத்ரி அகமது முக்தார் ஆகியோர் உடன் செல்கிறார் கள்.

இந்தப் பயணத்தின் போது அவர் அதிபர் ஹியூ ஜிண்டாவோ, பிரதமர் வென் ஜியாபா வோ ஆகியோரை சந்தித்துப் பேசுகிறார். அப் போது இரு நாடுகளுக்கு இடையே பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பதற்கான ஒப்பந்தங் கள் கையெழுத்தாகின்றன. (அ-5)

16 கரண்டிகளை முகத்தில் ஒட்டவைத்து 9 வயது சிறுவனின் கின்னஸ் சாதனை

(லண்டன்)

ஒன்பது வயது சிறுவன் கின்னஸ் சாதனை புரிந்துள்ளான். லண்டனைச் சேர்ந்த அவனது பெயர் ஜோஸ் அலிசன். அங்குள்ள ஒரு பள்ளியில் படித்து வருகிறான். சுட்டிப் பைய னான அவன் "மேசை கரண்டிகளை" வைத்து வித்தை காட்டுவதில் படுகில்லாடி.

எனவே 'கரண்டிகளை' கொண்டு சாதனை படைக்க எண்ணினான். அதில் வெற்றியும் பெற்றான். 16 கரண்டிகளை முகத்தில் ஒட்ட வைத்து காண்போரை வியப்பில் ஆழ்த்தி னான். கின்னசில் இடம்பிடித்தான். தலையில் 5 ,மூக்கில்1,கீழ் உதட்டில் 2, மேல் உதட்டில் 2 என முகமெல்லாம் கரண்டி முளைத்தது போல் இருந்தன.

சிறிய கரண்டிகளைக் கொண்டு மலையள வான கின்னஸ் சாதனை படைத்த ஜோஸ் அலிசன் முந்தைய இலக்கையும் முறியடித் தான்.

2004 ஆம் ஆண்டு அமெரிக்காவைச் சேர்ந்த 16 வயது மாணவன் முகத்தில் 15 கரண்டிகளை ஒட்டவைத்து கின்னசில் இடம் பிடித்தான். அதனை இப்போது ஜோஸ் முறிய டித்துள்ளான். (அ-5)

ரவைகள் நிரப்பப்பட்ட துப்பாக்கிகளுடன் வகுப்பறையில் 7 வயதுச் சிறுமி

அமெரிக்க மேரிலாண்டில் சம்பவம்

ரவைகள் நிரப்பப்பட்ட இரு துப்பாக்கிகள் சகிதம் பாடசாலைக்கு வந்த முதலாம் ஆண் டில் பயிலும் 7 வயது சிறுமியொருவர், பொலி ஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட சம்பவம் அமெரிக்க மேரிலாண்டிலுள்ள பல்திமோர் நகரில் இடம் பெற்றுள்ளது.

ரன்டல்ஸ்டவுன் ஆரம்பப் பாடசாலையில் கல்வி பயிலும் மேற்படி மாணவியின் சட்டைப் பையில் ரவைகள் முழுமையாக நிரப் பப்பட்ட நிலையில் ஒரு துப்பாக்கி இருப்பது ஆசிரிய ரால் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து, அவர் உடனடியாக அது தொடர்பில் பொலி ஸாருக்கு அறிவித்தார். இதனையடுத்து அங்கு பிரசன்ன மாகி சோதனை நடத்திய பொலிஸார் சிறுமியின் புத்தகப் பையிலிருந்து பிறிதொரு துப்பாக்கி யையும் கைப்பற்றினர்.

தனது மாமனார் ஒருவரின் வீட்டில் வார இறுதி விடுமுறையைக் கழித்த இச்சிறுமி, அவரின் துப்பாக்கிகளை விளையாட்டுப்பொருட் களாக கருதி பாடசாலைக்கு எடுத்து வந்துள்ள தாக தெரிவிக்கப்படுகிறது.

இந் நிலையில் மேற்படி சிறுமிக்கு எதிராக எதுவித குற்றச்சாட்டும் பதிவு செய்யப்படாத போதும், சிறுமி எடுத்துப் பயன்படுத்தும் வகையில் கவனயீனமாக துப்பாக்கிகளை வைத்திருந்தமை தொடர்பில் அச் சிறுமியின் மாமானார் குற்றச்சாட்டை எதிர்கொண் டுள் ளதாக கூறப்படுகிறது. (அ-5)

திட்டிய ஆசிரியையை படுகொலை செய்ய திட்டம் தீட்டிய 3ஆம் வகுப்பு மாணவர் அமெரிக்கப் பொலிஸாரால் கைது

தமது சக மாணவர் ஒருவரை கண்டித்த ஆசிரியையை பழிக்குப் பழி வாங்கும் வகை யில் அவரைக் கொலைசெய்ய சதித்திட்டம் தீட்டிய குற்றச்சாட்டில், மூன்றாம் வகுப்பில் கல்வி பயிலும்8 வயது முதல் 10 வயது வரை யான சிறுவர்களை அமெரிக்க பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தென் ஜோர்ஜியாவிலுள்ள சென்டர் ஆரம்ப பாடசாலையைச் சேர்ந்த இந்த மாணவர் களிடமிருந்து உடைந்த மாமிசம் ,வெட்டும் கத்தியொ ன்று, கடதாசி பாரந்தாங்கி யொன்று (பேப்பர் வெயிட்) கைவிலங்குகள், நாடா சுருள் கள் உள்ளடங்களான பொருட் கள் கைப்பற்றப் பட்டுள்ளன.



கடதாசி பாரந்தாங்கியால் ஆசிரியையின் தலையில் தாக்கி அவரை சுயநினைவிழக்கச் செய்ததன் பிற்பாடு, அவரது கைகளுக்கு விலங்கிட்டு நாடாவால் அவரை அசைய விடாமல் கட்டி கத்தியால் குத்திக் கொலை செய்ய மேற்படி சின்னஞ்சிறார்கள் திட்டமிட்டி ருந்தது விசார ணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாக நகர பொலிஸ் தலைமையதிகாரி ரோனி டான்னர் தெரிவித்தார்.

கடந்த 28ஆம் திகதி பாடசாலை மாணவ ரான சிறுமியொருவரிடம் ஆயுதமொன்று கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து, பாடசாலை ஆசிரியர்கள் பொலிஸாருக்கு இது தொடர் பில் அறிவித்தனர்.

இந்நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்படி வகுப்பில் தேடுதல் நடத்திய பொலி ஸார் சிறுவர்களிடமிருந்து, ஆயுதங்களைக் கைப்பற்றியுள்ளனர். இக் கொலைச் சதித்திட் டத்தில் 9 சிறுவர்களும் சிறுமிகளும் பங்கேற்ற தாக ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

கத்தி மற்றும் கடதாசி பாரந்தாங்கி என்பன வற்றை வைத்திருந்த இரு சிறுமிகள் (9வயது, 10 வயது) சிறுபராய குற்றச்செயல்கள் சட்டத் தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேசமயம், நாடா சுருளை வைத்திருந்த 8 வயதான சிறுவனும் கைது செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் மேற்படி சதித்திட்டத்துடன் தொடர்புடைய 9 சிறுவர் சிறு மிகளும் பாடசாலையிலி ருந்து இடைநிறுத்தம் செய் யப்படவுள்ளதாகதெரிவிக்கப் படுகிறது.

பாடங்களை கூர்ந்து கவனிக்க முடியாத வகை யிலான கற்றல் பிரச்சினை களையுடைய மாணவர் களை உள்ளடக்கிய வகுப் பிலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

தமது சக மாணவனை கடுமையாகத் திட்டி அவரை நாற்காலிமீது ஏறிநிற்கச் செய்த ஆசிரி யையை பழிக்குப் பழி வாங்கும் எண்ணம் மேற்படி சிறுவர்களிடம் மேலோங்கியிருந்த அதேசமயம், தமது நடவடிக்கையால் ஆசிரியர் உயிரிழப்பாரா இல்லையா என்பது குறித்து அறிவு ஞானம் அவர்களிடம் இல்லாதிருந்ததை விசாரணைகள் மூலம் அறிய முடிந்ததாக பொலிஸ் தலைமை அதிகாரி தெரிவித்தார்.

ஆனால் அவர்கள் தாம் ஆசிரியரைத் தாக் கும்போது அச்சம்பவம் வெளியில் இருப்பவர் களுக்கு தெரியாத வண்ணம் வகுப் பறை ஜன் னல்களை மூடவும், தாக்குதலுக்கு பிற்பாடு அவ்விடத்தை சுத்திகரிக்கவும் முன்கூட்டியே செவ்வனே திட்டமிட்டு அதற்கான பொறுப்பு களை தமது சக மாணவர்களிடம் ஒப்படைத் திருந்ததாகவும் தெரியவந்துள்ளதாக கூறப் படுகிறது. (அ-5)

கிழக்கு மாகாணசபைத் தேர்தல்

முஸ்லிம்கள் அதிக வாக்குகளைப் பெற்றால் முஸ்லிம் ஒருவரே முதல் அமைச்சர்

ஹிஸ்புல்லா தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் பதவி தமிழர் ஒருவருக்கே வழங்கப்படுமென தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளும், முஸ்லிம் பிர்திநிதிஒருவருக்கே வழங்கப்படு மென சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பிரிந்து சென்று ஆளும் தரப்பில் இணைந்து கொண்ட ஹிஸ்புல்லாவும் தெரிவிக்கின்றனர்.

கிழக்கு மாகாண மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு தமிழர் ஒருவரே முதலமைச்சராக நியமிக்கப்பட வேண்டுமென்ற கருத்தை அரசாங்கத்திடம் தெளிவாக எடுத்துக்கூறியிருப்பதாகவும், இதனை உரிய நேரத்தில் சரியாகப் பரிசீலிப்பதாக அரசாங்கம் தமக்கு உறுதிமொழி வழங்கியிருப்பதாகவும் பி.பி.சி. செயதிச் சேவைக்குக் கருத்துத் தெரிவித்திருக்கும்தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் பேச்சாளர் ஆசாத் மௌலானா கூறியுள்ளார்.

தமிழ் மக்களில் ஒருவர் முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்டு அதன் ஊடாகமக்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டு மென்ற கிழக்கு மக்களின் எதிர்பார்ப்புகள், ஆசைகள் தீர்க்கப்படவேண்டுமென்பதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

முதலமைச்சர் பதவி எமக்குத் தான் தரப்படுமெனஅரசாங்கம் நேரடியாக உறுதிமொழி எதனையும்வழங்காத போதும்கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவி தமிழர்களுக்கே வழங்கப்படுமென அரசாங் கத்தின் நிலைப்பாடு தெளிவாகத் தெரிவதாக ஆசாத் மௌலான பி.பி.சி. செய்திச் சேவைக் குத் தெரிவித்துள்ளார்.

மக்களுக்காக வேண்டியே அதிகாரங்களைப் பெறுவதற்கு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் முயல்வதாகவும் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழவேண்டும் என்பதற்காகவே அரசியலில் தாம் இறங்கியதாகவும் குறிப்பிட்ட ஆசாத் மௌலான தனியாகநின்று போட்டியிடுவதை விட அரசாங்கத்துடன் இணைந்து போட்டியிட்டு தமிழ் மக்களுக்கு மேலும் பல உதவிகளைப் பெற்றுக்கொடுக்க முடியுமென நம்பிக்கை வெளியிட்டார்.

முதலமைச்சர் பதவி யாருக்கென இது வரை உறுதிமொழி வழங்கப்படவில்லை-ஹிஸ்புல்லா

கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சர் பதவி யாருக்கென அரசாங்கம் இதுவரை உறுதிமொழி எதனையும் வழங்க வில்லை யென சிறிலங்கா முஸ்லிம் காங்கிர சிலிருந்து பிரிந்துசென்று அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் முஸ்லிம்கள் அதிகமான வாக்குகளைப் பெறும் பட்சத்தில் முஸ்லிம் ஒருவர் முதலமைச்சராகவும் தமிழர் ஒருவர் அதிகமான வாக்குகளைப் பெறும் பட்சத்தில் தமிழர் ஒருவர் முதலமைச்சராகவும் நியமிக்கப்படுவார்கள் என ஹிஸ்புல்லா கூறியுள்ளார்.

எனவே முஸ்லிம் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்கு தான் உள்ளிட்ட குழுவினர் முயற்சிப்பதாக நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் அவர் கூறினார்.

(அ-5)

பல்கலை ஆசிரியர் சங்கத்தின் குற்றச்சாட்டு பாதுகாப்பு அமைச்சு விசாரணை நடத்தும்

மஹிந்த சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

அக்ஷன் பெய்ம் பணியாளர்கள் 17பேர் மூதூரில் படுகொலை செய்யப்பட்டமை குறித்து மனித உரிமைகளுக்கான பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கம் முன்வைத்திருக்



கும் குற்றச்சாட்டுத் தொடர்பாக ஆராயுமாறு இலங்கை அரசாங்கம் பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

17 பணியாளர்களும் உள்ளூர் முஸ்லிம் ஊர்காவற்படைவீரர் ஒருவராலும் இராணுவத்தினர் மற்றும் பொலிஸாராலும் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் இது தொடர்பான தகுந்த ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாகவும் மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.

இந்த அறிக்கையை நாம் ஏற்கனவே பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பிவைத்திருப்பதுடன் அந்த அமைப்பின் குற்றச்சாட்டுக்கள் குறித்து தேவையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பாதுகாப்பு அமைச்சிடம் நாங்கள் கோரிக்கை விடுத்துள்ளோம் என அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரி மைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரி வித்தார்.

படுகொலைக்குக் காரணமானவர்கள் எனக் கூறப்படும் சில தனிநபர்களின் பெயர்களும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. அரசாங்கம்என்றரீதியில் இந்த அறிக்கை குறித்து விசாரணைகளை மேற்கொள்ளும் மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கம் விசாரணை ஆணைக்குழுவின்முன்னர்தமது சாட்சியங்களைநிறுத்த முடியும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

17 அக்ஷன் பெய்ம் பணியாளர்களின் படுகொலை குறித்த சூத்திரதாரிகளை உள்ளடக்கிய மனித உரிமைகளுக்கான பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கத்தின் அறிக்கை கிடைக்கப் பெற்றிருப்பதை பாதுகாப்பு அமைச்சும் உறுதிப்படுத்தியுள்ளது.

புதிய ஆணைக்குழுவொன்று உருவாக்கப்பட்டு அது தனது செயற்பாடுகளை சரியாக ஆரம்பிப்பதற்கு சிறிது காலம் எடுக்கும் அதே போலவே விசாரணை ஆணைக்குழுவின் செயற்பாடுகளும் தற்பொழுது குறைந்த வேகத்தில் முன்னெடுக்கப்படுவதாக மஹிந்த சமரசிங்க நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் குறிப்பிட்டார்.

எனினும் விசாரணை ஆணைக்குழு தனது வேலைகளை ஆரம்பித்துவிட்டது. திருகோணமலையில் ஐந்து இளைஞர்கள் கொல்லப்பட்ட விசாரணைகளை ஆணைக் குழு முடித்துள்ளது.

தற்பொழுது அக்ஷன் பெய்ம் நிறுவனப் பணியாளர்கள் 17 பேரினது படுகொலை குறித்த பொதுமக்கள் விசாரணை கள் ஆரம் பிக்கப்பட்டிருப்பதால் ஏனைய விசாரணைகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளன. பொத்துவிலில் 10 முஸ்லிம்கள் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுநடைபெற்றுவருகின்றன என மனித உரிமை அமைச்சர் கூறினார். (அ-5)

உணவு இறக்குமதியை குறைக்கத் திட்டம்

(கொழும்பு)

நாட்டின் உணவு உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்படும் உணவு வகைகளை வருடாந்தம் 10 வீதத்தால் குறைப்பதற்கும் விவசாயிகள் இயற்கைப் பசளையை பயன்படுத்துவதை அதிகரிப்பதற்காக அடுத்துவரும் 3 வருட காலப்பகுதியில் இரசாயனப் பசளைப் பயன் பாட்டை 25 வீதத்தால் குறைக்கும் திட்டத்துக் கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

விவசாய அபிவிருத்தி அமைச்சர் மைத்திரி பால சிறிசேன இதற்கான பிரேரணையை முன்வைத்திருந்தார். 2010ஆம் ஆண்டு வரை நடைமுறைப்படுத்தப்படவுள்ள இத்திட்டத்துக்கு 305 மில்லியன் ரூபா செலவிடப்படும். (அ-5)

ஜப்பானின் உதவியுடன் சுற்றுலாத்துறை அபிவிருத்தி

இலங்கையின் சுற்றுலாத்துறையை வளர்ச்சியடையச் செய்வதற்கு ஜப்பானிய சர்வ தேச அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளது. இலங்கையின் சுற்றுலாத்துறைக்கான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற் கும், உல்லாசப்பயணத்துறைதொடர்பாக ஜப் பானில் பிரசாரங்களை முன்னெடுப்பதற் கும் ஜப்பான் 2.8 பில்லியன் ரூபாவை வழங் கி யிருப்பதாக சுற்றுலாத்துறை அமைச்சின் மேலதிக செயலாளர் ஜோர்ஜ் மைக்கல் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரசார நடவடிக்கையில் சிகிரியா, அநுராதபுரம், நுவரெலியா, நீர்கொழும்பு, கண்டி மற்றும் கொழும்பு ஆகிய பகுதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று அவர் கூறியுள்ளார். சுற்றுலாப்பயணத்துறையை மேலும் அபி விருத்தி செய்வது தொடர்பாக நியமிக்கப்பட்டி ருக்கும் சபை , வீதி அபிவிருத்திச் சபை மற் றும் மாநகரசபைகளுடன் இணைந்து புனரமைப்புப் பணிகளை முன்னெடுக் கவுள்ளது. இந்தத் திட்டத்துக்காக இலங்கை அரசாங்கம் 600 மில்லியன் ரூபா நிதியை வழங்க வுள்ளது. இதன் மூலம் இலங்கைக்கு ஜப்பானிய உல்லாசப் பயணி களை கவரமுடியுமென சுற்றுலாத்துறை அமைச்சு கூறுகிறது.

2007ஆம்ஆண்டுமுதல்2010ஆம்ஆண்டு வரையான காலப்பகுதியில் இலங் கையின் சுற்றுலாப்பயணத்துறையை அபி விருத்தி செய்வதற்கு எந்தத் திட்டங்களும் முன்னெடுக் கப்படவில்லை. இந்த நிலையில் ஜப்பானின் உதவியுடன் முன்னெடுக்கப்பட விருக்கும் இந்த அபிவிருத்தி நடவடிக்கையே முதலாவது வெளிநாட்டு அபவிருத்தி உதவித் திட்டம் என சுற்றுலாத்துறை அமைச்சின் மேல திக செயலாளர் ஜோர்ஜ் மைக்கல் கூறினார். (அ)

பின்னுறுதித் தீர்வை

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

பரதாசன் ரவீந்திரதாசன்
பெண் பகீரதி
இல. 285/2, 5ஆம் ஒழுங்கை,
அரசடி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

வழக்காளி

வழ. இல. மணநீக்கம்/663

எதிராக

பரதாசன் ரவீந்திரதாசன்
தீயணைப்புப் படை உத்தியோகத்தர்
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

எதிராளி

இவ்வழக்கு 2008ஆம் ஆண்டு பங்குனி மாதம் 26ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு.இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வந்தபோது எதிராளியும் எதிராளியின் பதிவுபெற்ற சட்டத்தரணி திரு.மு.திருநாவுக்கரசு அவர்களும் பிரசன்னமாயிருக்க இவ்வழக்கு 25.03.2008ஆம் திகதி விளக்கத்திற்கு திகதியிடப்பட்டவேளை வழக்காளியும் வழக்காளி தரணியும் சமூகமின்மையால் எதிராளி சார்பில் இவ்வழக்கு இன்று ஒருமுக விளக்கத்திற்கு நியமிக்கப்பட்டதற்கு அமைய எதிராளியின் சட்டத்தரணி எதிராளியின் சாட்சியத்தை நெறிப்படுத்த மன்றின் அனுமதியைக் கோரி மன்றின் அனுமதி யுடன் எதிராளியின் சாட்சியம் நெறிப்படுத்தப்பட்ட பின்னர் எதிராளியின் மறுமொழி 011 ஆவ ணம் எதிராளி மன்றில் இன்று அறிவித்த சாட்சியம் வழக்காளியின் பிராது ஆகியவற்றை வழக்கோட்டுடன் சேர்த்து மன்று பரிசீலித்து எதிராளி தனது மறுமொழியில் கோரிய நிவாரணங்களைப் பெறத் தகுதியுடையவர் எனக் கண்டு பின்வருமாறு கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

எதிராளிக்கும் வழக்காளிக்கும் இடையே 1979ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 19ஆம் திகதி நிறைவேறிய பதிவுத் திருமணத்தை வழக்காளி வேண்டுமென்று எதிராளியை விட்டு பிரிந்து வன்ம உறவறுப்புச் செய்த குற்றத்திற்காக இரத்துச்செய்து வெற்றும் வெறுதுமானதென இத்தால் கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இப்பின்னுறுதித் தீர்வையின் பிரதி வலம்புரி தேசிய தினசரிப் பத்திரிகையில் விளம்பரப் படுத்தி வழக்காளிக்கு பதில் சேவகம் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் வழங்காளி எதுவித நடவடிக்கையும் எடுக்கத்தவறும்பட்சத்தில்விதிக்கப்பட்டகாலம் முடிவடைந்தது இப்பின்னுறுதித் தீர்வையானது முற்றான தீர்வையாக்கப்படுமென கட்டளையிடப்பட்டுள்ளது.

2008ஆம் ஆண்டு பங்குனி மாதம் 26ஆம் திகதி

வரைந்தது
எதிராளியின் சட்டத்தரணி

நீதிமன்றக் கட்டளைப்படி
து.சிறீமோகன்
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

(1061)

டில்சான், சாமர இணைப்பாட்டத்தினால் இலங்கை அணி சரிவிலிருந்து மீண்டது

(போட்ஒப்ஸ்பெயின்)

டில்சான், சாமரசில்வாவின் சிறப்பான இணைப்பாட்டத்தினால் இலங்கை அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் நேற்று



முன்தினம் முதல்நாள் ஆட்டநேர முடிவில் 5 விக்கெற்றுக்களையிழந்து 217 ஓட்டங்களை எடுத்திருந்தது.

மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 2 டெஸ்ட் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது. இத்தொடரின் முதலாவது போட்டியில் வெற்றி பெற்று தொடரில் இலங்கை அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்க இரண்டாவதும் இறுதியுமான தீர்க்கமான டெஸ்ட் நேற்று முன்தினம் போட் ஓப்ஸ்பெயினிஸ் ஆரம்பமானது .

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களான வான்டொட், வர்ணபுர ஆகியோர் சிறப்பான ஆரம்பத்தை ஏற்படுத்தினர்.

இருவரும் இணைந்து இணைப்பாட்டமாக 62 ஓட்டங்களை எடுத்த போது வர்ணபுர 35 ஓட்டங்களுடன் எட்வோட்ஸின் பந்தில் சற்றகோனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய சங்கக்காரா 10 ஓட்டங்களுடன் எட்வோட்ஸின் பந்து வீச்சில் ராம்டிம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய மஹேல ஜெயவர்த்தனா வாண்டொட்டுடன் இணைந்து நிதானமாக ஆடினார்.

மழை குறுக்கீடு

மதிய போசனத்திற்கு பின்பு மழை குறுக்கிட்டதால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டு சிறிது நேரத்தின்பின் ஆரம்பமானது.

ஆரம்பமுதலே சிறப்பாக ஆடிய வாண்டொட் 30 ஓட்டங்களுடன் எட்வோட்சின் பந்து வீச்சில் ராம்டினிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து சமரவீரா களமிறங்கினார்.

மீண்டும் மழை குறுக்கீடு செய்ய ஆட்டம் இடைநிறுத்தப்பட்டு ஒரு மணி நேரத்தின் பின் ஆரம்பமானது. அப்போது சமரவீர 6 ஓட்டங்களை மாத்திரமெடுத்த நிலையில் ரெய்லரின் பந்துவீச்சில் ஹைலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய டில்கான் சிறப்பாகத் துடுப்பெடுத்ததாட மறுமுனையில் அணித்தலைவர் மஹேல ஜெயவர்தனா 26 ஓட்டங்களை எடுத்த போது ரெய்லரின் பந்து வீச்சில் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்தடுத்து விக்கெற்றுக்களையிழந்து 117 ஓட்டங்களை மாத்திரமெடுத்த நிலையில் 5 விக்கெற்றுக்களையிழந்து இலங்கை அணி தடுமாறியது.

அடுத்து டில்சானுடன் இணைந்த சாமர சில்வா சிறப்பாக ஆடி இலங்கை அணியை வலுவான நிலைக்கு அழைத்துச்சென்றனர். இந்நிலையில் 35.5 ஓவர்கள் வீசப்பட்ட நிலையில் மீண்டும் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டு சில மணி நேரத்தில் ஆரம்பமானது.

அதிரடியாக ஆடிய டில்சான் தனது அரைச் சதத்தை பூர்த்தி செய்தார். இந்நிலையில் போதிய வெளிச்சமின்மையால் ஆட்டம் தேனீர் இடைவேளைக்கு முன்பாகவே முதல் நாள் ஆட்டம் 46.3 ஓவர்கள் மாத்திரம் வீசப்பட்ட நிலையில் நிறுத்தப்பட்ட போது இலங்கை அணி 5



விக்கெற்றுக்களையிழந்து 217 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் ஆட்டமிழக்காமல் டில்சான் 57 பந்துகளில் (7 பௌண்டரி உட்பட) 58 ஓட்டங்களையும் சாமரசில்வா 37 ஓட்டங்களையும் எடுத்து துடுப்பெடுத்தாடி வருகின்றனர்.

பந்துவீச்சில் எட்வோட்ஸ் 3 விக்கெற்றுக்களையும் ரெய்லர் 2 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

போட்டியில் இரண்டாம் நாள் ஆட்டம் நேற்று (இலங்கை நேரப்படி இரவு) நடைபெற்றது. (5)

டி வில்லியர்ஸ் இரட்டைச் சதம், கலிஸ் சதம் தென்னாபிரிக்க அணி வலுவான நிலையில்

(அகமதாபாத்)

டி வில்லியர்ஸ் இரட்டைச் சதம்,கலிஸ் சதம் அடிக்க தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸில் 7 விக்கெட்டுக்களை இழந்து 494 ஓட்டங்களைஎடுத்து வலுவான நிலையில் உள்ளது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. முதலாவது போட்டி சமநிலையானது.

இத்தொடரின் 2-வது போட்டி நேற்று முன்தினம் அகமதாபாத்தில் ஆரம்பமானது. இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 76 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது.

இதில் அதிக பட்சமாக பதான் ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களையும் தோனி 14 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஸ்ரையன் 5 விக்கெட்டுக்களையும் நிற்னி 3 விக்கெட்டுக்களையும் மற்றும் மோர்கல் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி நேற்று முன்தினம் முதல்நாள் ஆட்ட நேர முடிபில் 4 விக்கெட்டுக்களை இழந்து 223 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் ஜக்கலிஸ் 60 ஓட்டங்களுடனும் டி வில்லியர்ஸ் 59 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

2ஆம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, ஜக்கலிஸ் மற்றும் டி வில்லியர்ஸ் ஆகியோரின் சிறப்பான 5-வது விக்கெட்டுக்காக 256 ஓட்டங்கள் இணைப்பாட்டமாக பெற வலுவான நிலைக்குச் சென்றது.

மழை காரணமாக 14 ஓவர்கள் வீச மீதமுள்ள நிலையில் நேற்றைய 2ஆம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டபோது தென்னாபிரிக்க அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 494 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதன் மூலம் இந்திய அணியைவிட முதலாவது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்கள் மீதமுள்ள நிலையில் 418 ஓட்டங்களால் முன்னிலையிலுள்ளது.

துடுப்பாட்டத்தில் டி வில்லியர்ஸ் ஆட்டமிழக்காமல் (கன்னி இரட்டைச் சதம்) 217 ஓட்டங்களையும் ஜக்கலிஸ் 132 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் ஹர்பஜன் சிங் 4 விக்கெட்டுக்களையும் சிறிசாந் 2 விக்கெட்டுக்களையும் மற்றும் கும்ளே ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும். (5)

அக்தருக்கு மற்றுமொரு அடி; ஐ.பி.எல்லிலும் அனுமதி மறுப்பு

(மும்பை)

அக்தர் நிலை மிகவும் பரிதாபமாக உள்ளது . ஏற்கனவே 5 ஆண்டுகள் தடையால் நொந்துபோன இவருக்கு இன்னொரு அதிர்ச்சியான விடயம் ஐ.பி.எல் போட்டிகளில் பங்கேற்கவும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது . பாகிஸ்தான் அணியின் சர்ச்சைக்குரிய பந்துவீச்சாளர் அக்தர் இந்த ஆண்டு ஜனவரியில் அறிவிக்கப்பட்ட வீரர்களுக்கான ஒப்பந்த பட்டியலில் இருந்து நீக்கப்பட்டார். இதனால் ஆத்திரமடைந்த அக்தர் கிரிக்கெற் சபை நிர்வாகிகளை கடுமையாக விமர்சித்தார் . இதையடுத்து இவருக்கு 5 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டது. இந்தத் தடை பாகிஸ்தானில் மட்டும் பொருந்தும் என்பதால் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) போட்டிகளில் அக்தர் பங்கேற்பார் என எதிர்பார்க்கப்பட்டது. இவர் ஷாருக்கானின் கோல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக ரூ. 1.8 கோடிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

ஐ.பி. எல் மறுப்பு :

இந்தச் சூழலில் அக்தருக்கு அனுமதி அளிக்க ஐ.பி.எல் நிர்வாக குழு மறுத்து விட்டது. இது குறித்து இவ்வமைப்பின் தலைவர் லலித் மோடி கூறுகையில் அக்தரின் நிலைமை பற்றி நிர்வாக குழுவில் நீண்ட நேரம் விவாதித்தோம். பாகிஸ்தான் கிரிக்கெற் சபையால் 5 ஆண்டுகளுக்கு தடை விதிக்கப்பட்ட இவரை ஐ.பி.எல் போட்டிகளில் பங்கேற்க அனுமதி மறுப்பது என முடிவு செய்தோம். ஒரு வேளை இவரது மேல் முறையீடு ஏற்கப்பட்டு தடையில் இருந்து விடுவிக்கப்பட்டால் ஐ.பி. எல் அணியில் சேர்த்துக் கொள்ளப்படுவார் என்றார்.

ஐ .சி. எல் கைவிரிப்பு :

ஐ.பி. எல் கைவிட்ட நிலையில் கபில்தேவ் தலைமையிலான இந்தியன் கிரிக்கெற் லீக்கும் (ஐ.சி. எல்) அக்தரை சேர்த்துக் கொள்ள முன்வரவில்லை.

கிரிக்கெற் சூதாட்டம்:

தடையை எதிர்த்து அக்தர் மேல்முறையீடு செய்ய உள்ளார் இது குறித்து அக்தர் கூறுகையில் இந்தியா மற்றும் ஜோகன்னஸ்பார்க்கில் விளையாடிய போது சூதாட்டக்காரர்கள் என்னை தொடர்பு கொண்டார்கள் பெரும் தொகையை பெற்றுக்கொண்டு போட்டியில் மோசமாக செயல் படும்படி வற்புறுத்தினார்கள். இதனை உடனடியாக நிராகரித்தேன். எனது நாட்டுக்கு துரோகம் செய்ய விரும்பவில்லை என்றார்.

ஐ.பி.எல் போட்டிக்கு அனுமதி அளிக்க பாகிஸ்தான் கிரிக்கெற் தலைவர் நசிம் அஷ்ரப் லஞ்சம் கேட்டதாக அக்தர் குற்றம் சாட்டினார் . பணம் கொடுக்க மறுத்ததால் தான் தடை விதித்ததாக கூறினார். இதையடுத்து அஷ்ரப் சார்பில் ரூ. 20 கோடி இழப்பீட்டு தொகை கேட்டு அக்தர் மீது மானநஷ்ட வழக்கு தொடரப்படடுள்ளது. இதற்கான நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. டிவி ஒன்றுக்கு பேட்டி அளித்த அக்தர், தான் அஷ்ரப் மீது எவ்வித புகாரும் கூறவில்லை என பல்டி அடித்துள்ளார். (5)

அக்தரிடம் 3 மி. டொலர்கள் நஷ்டஈடு கோரியது பி.சி.பி

தடைவிதிக்கப்பட்டுள்ள வேகப்பந்து வீச்சாளர் சோயிப் அக்தரிடம் 3 மில்லியன் டொலர் நஷ்ட ஈடு கோரி பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வழக்கு தொடர்ந்துள்ளது. தடை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை மற்றும் அதன் நிர்வாகிகள் மீது அக்தர் அவ தூறு பரப்பும் வகையில் பேசியதற்காக அவருக்கு எதிராக இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் நசீம் அஷ்ரப் சோயி அக்தர் கூறியுள்ள குற்றச்சாட்டுக்கள் அடிப்படை ஆதாரம் அற்றது என்றும், கிரிக்கெற் சபையையும் அதன் நிர்வாகிகளையும் களங்கப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது என்றும் கூறினார்.

தனக்கும் கிரிக்கெற் சபைக்கும் சோயிப் அக்தர் நஷ்ட ஈடாக தலா 1 மில்லியன் டொலர்கள் வழங்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார். மேலும் அவதூறு பரப்பும் வகையில் பேசியதற்காக அக்தர் மன்னிப்பு கோர வேண்டும் என்றும் அவர் கூறினார்.

5 ஆண்டுகள் தாம் கிரிக்கெற் விளையாட தடை விதிக்க வேண்டும் என்று நசீம் அஷ்ரப் கிரிக்கெற் ஒழுங்கு நடவடிக்கை குழுவை நிர்ப்பந்தம் செய்ததாக அக்தர் குற்றம் சாட்டியிருந்தார். இதனிடையே இந்தப் பிரச்சினையில் சமரசம் செய்து கொள் ளுமாறு இரு தரப்பினரையும் பாகிஸ்தான் கிரிக்கெற்வீரர் யூனிஸ்கான் கேட்டுக் கொண்டுள்ளார். (5)

கொமிசியக் கூட்டம்

(ஊர்காவற்றுறை)

யாழ்.மறை மாவட்ட புனித - மரியாயின் சேனையின் மாதாந்த கொமிசியக் கூட்டம் வழமைபோல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை10 மணிக்கு யாழ்.மறைக்கல்வி நடு நிலைய ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற வுள்ளது. (ஓ-72)

மஹோற்சவம்

யாழ்ப்பாணம் - வண்ணை வடமேற்கு கேசாவில் ஸ்ரீ முத்துவிநாயகர் தேவஸ்தான முதலாவது மஹோற்சவ விஞ்ஞாபனம் இன்று சனிக்கிழமை காலை 11மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளது.

12 ஆம் திகதி சனிக்கிழமை மாலை சப்பற மும், 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற் பகல் 9.30 மணிக்கு இரதோற்சவமும், 14 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (அ-7)

பேச்சுத்திறன் காண் வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பாலர் கல்விக்கழக நிர்வாகத்தி லுள்ள 14 ஞானக் குழந்தை இல்ல பாலர் பரடசாலைகள் இணைந்து வழங்குகின்ற தேனென இனிக்கும் மழலை மொழியிலான பேச்சுத் திறன் காணும் வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் சிவ நெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன் தலை மையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக தீவக லயன்ஸ் கழகத் தலைவர் லயன் ஜ.கோ. சந்திரசேகரம் ஜே.பியும், தீவக லயன்ஸ் கழக அங்கத்துவப் பணிப்பாளர் லயன் சு. நித்தி யானந்தன் ஜே.பியும் கலந்துகொள்ளவுள்ள னர். (அ-7)

அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் இம்மாதம் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள் ளது.

8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு கும்பாபிஷேக தின சங்காபிஷே கமும் தொடர்ந்து திருவூஞ்சல் மணவாளக் கோல உற்சவம் ஆகியனவும், 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சர்வதாரி வருடப்பிறப்பு அபிஷேகமும், 17 ஆம் திகதி வியாழக்கிழமை 8மணிக்கு சங்காபிஷேக மும், 18 ஆம்திகதி வெள்ளிக்கிழமை திருக் குளிர்த்தி அபிஷேகமும், அன்னதானம் என் பனவும் 25 ஆம்திகதி வெள்ளிக்கிழமை வைர வர் சாந்தியும் இடம்பெறவுள்ளது. (அ-7)

கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

அநுராவின் மறைவும் பண்டாரநாயக்க யுகத்தின் அஸ்தமனமும் எனும் தொனிப் பொருளில், யாழ்ப்பாணம் சர்வதேச மார்க் சிய குழுவினரால் 89, வேம்படி வீதியில் அமைந்துள்ள அகவிழி காரியாலயத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.35 மணிக்கு ஏ.சி.ஜோர்ஜ் தலைமையில் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் சொ.சிவபாலன் ஆரம்ப உரை யை நிகழ்த்துவார். ஆர்வலர்கள் கலந்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது. (ஓ)

பட்டதாரி ஆசிரியர்களுக்கான ஆங்கில பாடப் பயிற்சிநெறி

(அல்வாய்)

நெக்கோட் அமைப்பின் அனுசரணை யுடன் பட்டதாரி ஆசிரியர்களுக்கான ஆங்கில பாடப் பயிற்சி நெறி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் பயிற்சி நிலையம் மற்றும் வட இந்து மகளிர் கல்லூரி ஆகிய இரு இடங்களிலும் இன்று சனிக்கிழமை முதல் 10 நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்த பட்டதாரி ஆசிரியர்கள் தங்களுக்கு வசதியான ஏதாவது ஒரு நிலையத்தில் பதிவு செய்து பயிற்சிநெறியில் பங்குபற்றலாம். இடையில் மாற்றம் செய்யப்படமாட்டாது. (ஓ-19)

காரைநகர் சிவன்கோவில் திருப்பணிச் சபை தெரிவு

காரைநகர் திண்ணபுரம் சிவன்கோவில் (ஈழத்துச் சிதம்பரம்)திருப்பணிச் சபை ஆதீன கர்த்தாக்களால்புதிதாகஉருவாக்கப்பட்டுள்ளது.

போஷகர்களாக சிவத்திரு க. வைத்தீஸ் வரக் குருக்கள், பேராசிரியர் கனகசுந்தரம், திருமதி வி.மகேஸ்வரன் ஆகியோரும் தலை வராக லயன் த.சற்குணராசாவும் உபதலை வராக க.ஆறுமுகமும் செயலாளராக ச.வே. சிவகுருநாதனும்உபசெயலாளராகசி.கோ்ணே சலிங்கமும் பொருளாளராக ந.யோகநாத னும் உபபொருளாளராக ஈ.எஸ்.பி. நாகரத்தினமும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் நிர்வாக அங்கத்தவர்களாக ச.அற்புததேவராசா, கு.விமலக்குமார், இ.ஜெயராசா,கா.சோமசுந்தரம்,தி.தேவராசன், வே.சபாலிங்கம், சி.சிவானந்தராசா, மு.விசுவ நாதன், இ.இராசதுரை, வி.வைகுந்தவா சன், க.சிவனேசன், ச.சிவகுமார், எஸ்.ரி. பரமேஸ்வரன்,ச.சிவஞானம், ப.செந்தூரன், ந.சிவபரன்,க.பிரதீபன் ஆகியோரும் உள்ளக எண்பார்வையாளராக சி.வெற்றிவேலாயு தமும் நியமிக்கப்பட்டுள்ளனர். (அ-6)

கே.சி.சி.சி. கிண்ணத்திற்கான கிரிக்கெற் சுற்றுப்போட்டி

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினால் வருடாந்தம் நடாத்தப்பட்டு வரும் கே.சி.சி.சி. கிண்ணத்திற் கான கிரிக்கெற் சுற்றுப்போட்டி இன்று ஆரம் பமாகவுள்ளது.

இப்போட்டிகளில் இன்று சனிக்கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு யாழ். பல்கலைக் கழகம் எதிர் சென்றல், பிற்பகல் 1.30 மணிக்கு கே.சி.சி.சி. எதிர் காமாட்சி -அணிகளும் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு. ஜொணியன்ஸ் எதிர் கிறாஸ் கொஹாப்பர்ஸ், பிற்பகல் 1.30மணிக்கு அரியாலை எதிர் யூனியன்ஸ் அணிகளும் மற்றும் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் காலை 8.30 மணிக்கு பற்றிசியன்ஸ் எதிர் சென்றல் லைற் அணிகளும் விளையாட வுள்ளன. 6 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு ஜொணியன்ஸ் எதிர் யூனியன்ஸ், பி.ப.1.30 மணிக்கு கிறாஸ் கொப்பர்ஸ் எதிர் நியூ ஸ்ரார் அணிகள் கொக்குவில் இந்துக் கல்லூரியி லும் விளையாடவுள்ளன. (ஓ)

'சிவதொண்டர் வஸ்திரம்' வழங்கும் வைபவம்

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் 10ஆம் ஆண்டு நிறைவு ஞாபகார்த்தமாக 'சிவதொண்டர் வஸ்திரம்' வழங்கும் வைப வம், உடுவில் மீனாட்சி சுந்தரேஸ்வர சுவாமி தேவஸ்தான முகப்பு மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு மன்றத் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் சிவஸ்ரீ சி.முத்துச்சாமிக் குருக் கள், சிவஸ்ரீ சி.பாலசுப்பிரமணியக் குருக்கள் ஆகியோர் ஆசியுரையும், மன்றத் தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் பிரார்த் தனையுரையும், மன்றப் புரவலர் கா.சிவாஜி வாழ்த்துரையும் வழங்கவுள்ளனர். (ஓ)

விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வலி கிழக்கு பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக் கிடையிலான விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதா னத்தில் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேசும் கௌரவ விருந்தினர்களாக நெக்டெப் வே.வீரகத்திப் பிள்ளை, பதில் மாவட்ட விளையாட்டு உத்தி யோகத்தர் எஸ்.துரைசிங்கம், நீர்வேலி அத்தி யார் இந்துக்கல்லூரி அதிபர் ஆர்.குணநாதன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் மக்கள் வங்கியைச் சேர்ந்த எஸ். நித்தியானந்தன், கோப்பாய் இலங்கை வங்கியைச் சேர்ந்த வி.அருளானந்தம் ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள் ளனர். (ஓ-134)

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் காப்புறுதி ஆலோசகர்களாக கடமையாற்றும் உத்தியோகத்தர்களில் 62 பேர் அரசினால் நடத்தப்பட்ட IBSL பரீட்சையில் சித்தியடைந்திருந் தனர். அவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும், அடையாள அட்டை வழங்கும் நிகழ்வும் அண்மையில் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றபோது பிராந்திய முகாமையாளர் திருமதி R.F.அரியநாயகத்தால் காப்புறுதி ஆலோசகர்கள் கௌரவிக்கப்படுவதனைப் படத்தில் காணலாம்.

அமரர் பஞ்சலிங்கத்துக்கு யாழ்.வலயத்தில் நாளை காலை 10 மணிக்கு இறுதி அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளருமாகப்பணியாற்றியகாலஞ்சென்ற த.பஞ்சலிங்கத்தின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நாளை ஞாயிற் றுக்கிழமை மு.ப.10 மணிக்கு யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. அதிபர், ஆசிரியர், முன்பள்ளி ஆசிரியர், வல யக் கல்வி அலுவலக உத்தியோகத்தர் இந் நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாருக்குத் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தலாம்.

அன்னாரின் இல்லத்தில் ஞாயிறு மு.ப 7 மணிக்கு இடம்பெறும் இறுதிக் கிரியைகளைத் தொடர்ந்து யாழ்.வலயக் கல்விப் பணி மனைக்கு எடுத்துவரப்படும் பூதவுடல் அங்கு இடம்பெறும் இறுதி அஞ்சலி நிகழ்வைத் தொடர்ந்து தகனக் கிரியைகளுக்காக மு.ப.11 மணியளவில் அரியாலை சித்துப்பாத்திமயான த்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் அன்று நடைபெறவுள்ள அனைத்து செயற்பாடுக ளும் பிற்போடப்பட்டுள்ளன. நடைபெறும் திகதிகள் பின்னர் அறியத்தரப்படும் என யாழ்.வலயக் கல்வித் திணைக்களப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ரி.வை. இரவீந்திரன் தெரிவித்துள்ளார். (அ)

திருமணமாகாத சான்றிதழ் வழங்குதல் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

திருமணமாகாத சான்றிதழ் வழங்குதல் தொடர்பாக சென்ற மாதம் 13,14 ஆம் திகதி களில் இடம்பெற்ற மாவட்ட செயலர்கள்/ அரசாங்க அதிபர்களுக்கான மாநாட்டில்பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செய லாளருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் திருமணமாகாத சான்றிதழ்களை வழங்கு வதில் சில பிரச்சினைகள் இருப்பது சுட்டிக் காட்டப்பட்டுமேற்படி சான்றிதழ்களை வழங்கு வதை சகல மாவட்டங்களிலும் இடை நிறுத்தி வைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டதாக அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

எனவே உடனடியாகவே மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலர்கள்/உதவி அரசாங்க அதிபர்கள் இதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் எனவும் மேலும் விண்ணப்பதாரிகள் இதுபற்றி தம்மால் பிறப் பிக்கப்படும் சத்தியக்கடதாசிகளைப் பயன்படுத் திக் கொள்ளலாம் எனவும் அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (ஓ)

'பள்ளிக்கூடம்' - திரைப்பட காட்சியும் கலந்துரையாடலும்

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகப்புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் கல்விசார்/கலைத்துவம் சார் படக் காட் சித் தொடரில் இன்று காலை 9.30 மணிக்கு பிரபல திரைப்பட இயக்குநர் தங்கர்பச் சானின் நெறியாள்கையில்உருவான 'பள்ளிக் கூடம்' எனும் தமிழ் திரைப்படம் வீடியோக் காட்சியாக அரசறிவியல் விரிவுரை மண்டபத்தில் காண் பிக்கப்படவுள்ளது.

திரைப்படக் காட்சியின் இறுதியில் திரைப் படம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம் பெறும். ஆர்வலர்கள் அனைவரும் வருகை தந்து பயன்பெற முடியுமென புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரி யர் இரா.சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார். (ஓ)

பொதுச் சந்தை புனரமைப்புக்கு 60 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பொதுச் சந்தையைப் புனரமைப்பதற்காக 60 மில்லியன் ரூபா நிதியை நெக்டெப் நிறுவனம் ஒதுக்கீடு செய் துள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரி வித்தார்.

நீண்டகாலமாக பழுதடைந்து முற்றாகச் சேதமடைந்துள்ள குறித்த சந்தையை மீள் நிர்மாணம் செய்வதற்காக முதற்கட்டமாகவே இந் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

வருடாந்த குருபூசை

(யாழ்ப்பாணம்)

தவத்திரு தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமி களின் வருடாந்த குருபூசைத் தினம் 7ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

நல்லூர் தேர் முட்டிக்கு முன்பாக அமைந் துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் காலை 8.30 மணிமுதல் நற்சிந்தனைப் பாடல்கள் படிக்கப்பட்டு, நண்பகல் 12 மணிக்கு விசேட பூசை, தேரடியில் பூசை என்பன நடைபெற்று மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (ஓ)

தனியார் சிற்றூர்திச் சேவை பணிமனை புனரமைப்பு

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச த்தில் தீக்கிரையாக்கப்பட்ட தனியார் சிற்றூர் திச் சேவை பணிமனை பல இலட்ச ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டு வருவதாக தீவக வலய நேரக் கணிப்பாளர் ஜீவா அலோசியஸ் நமது செய்தியாளரிடம் தெரிவித்துள் ளார். (ஓ-72)

கணனி அலகு ஆரம்பம்

(அல்வாய்)

புற்றளை மகா வித்தியாலயத்தில் கணனி அலகு ஆரம்ப நிகழ்வு 7 ஆம் திகதி திங்கட் கிழமை காலை 10.30 மணிக்கு வித்தியாலய அதிபர் மு.அனந்தீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமரா ட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா சிறப்பு விருந்தினராக இலங்கை சிறுவர் பாது காப்பு நிதிய கல்வித் திட்ட முகாமையாளர் ஏ.ஆ.முத்துராசா ஆகியோர் கலந்துகொள் ள வுள்ளனர். (ஓ-19)

பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

என்னால் எதையுமே செய்யமுடியுமென்று தன் மீது தளராத நம்பிக்கை கொண்டு எவன் கடுமை யாக உழைக்கின்றானோ அவனுக்கு எப்போதும் வெற்றி கிடைக்கும். – பிராக்பா

வலம்புரி

உயர்தரப் பாடத்தெரிவில் தகுந்த வழிகாட்டல் தேவை

கடந்த 2007 டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த.(சா) தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. யாழ்.குடாநாட்டின் பெறுபேறுகள் திருப்தி அளிப்பதாகக் கல்வியியலாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

யுத்த சூழ்நிலையிலும் காத்திரமான பெறுபேறுகளைப் பெற்று யாழ்ப்பாணத்துக் கல்விப் பாரம்பரியத்தின் பெருமையைக் காப்பாற்றிய மாணவர்களும் அவர்களை வழிப்படுத்திய சகலரும் பாராட்டுக்குரியவர்கள்.

க.பொ.த.(சா) தரப்பரீட்சைப் பெறுபேறுகள் குறித்து நாம் பெருமையடையும் அதேநேரம், சாதாரணதரத்தில் அதி உச்சமான பெறுபேற்றைப் பெற்ற மாணவர்கள் உயர்தரத்தில் தோல்வி கண்டு விடுவது வேதனை தரும் செய்தியாகும்.

அதாவது சாதாரண தரத்தில் '10ஏ' அல்லது 9ஏ பெற்றுக்கொள்ளும் மாணவர்கள் உயர்தரத்தில் தோல்விகண்டு விடுகின்றனர். இத்தகைய துர்ப்பாக்கியமான நிலை ஏற்படுவதற்கு சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேற்றை மட்டும் மையமாக வைத்துக் கொண்டு உயர்தரத்திற்கான பாடத் தெரிவை மேற் கொள்வதே முக்கியமான காரணமாகும்.

ஒரு மாணவன் பத்துப் பாடங்களிலும் அதி விசேட சித்தியைப் பெற்றுவிட்டார் என்பதற்காக அவர் உயிரியல் விஞ்ஞானத்தையோ அல்லது இணைந்த கணிதத்தையோ கற்றுத்தேறும் வலுஉடையவர் என்ற முடிபுக்கு எவரும் வந்துவிடலாகாது.

மாணவர்களின் சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறு உயர்தரப் பாடத் தெரிவைத் தீர்மானிக்கும் ஒரு சிறுபகுதி என்பதை மாணவர்கள் மறந்து விடக் கூடாது.

இதற்கு மேலாக குறித்த மாணவரின் உள்வாங்கும் சக்தி, கிரகித்தல்திறன் தாமாக முயற்சித்துக் கண்டறியும் ஆற்றல், தேடலில் ஈடுபடுவதற்கான நோக்கத்தின் அடிப்படை, குடும்பப் பின்புலம், இயல்பாக இருக்கக்கூடிய ஆளுமைப்பண்புகள் போன்ற பல்வகை இயல்புகளினூடே உயர்தரத்திற்கான பாடத்தெரிவை மேற்கொள்ள வேண்டும்.

எனினும்துரதிர்ஷ்டவசமாகயாழ்.குடாநாட்டுமாணவர்கள் தனித்து சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேற்றையும், பாடசாலை மட்டத்தில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய துறைகளுக்கு இருக்கக்கூடிய குட்டிக் கௌரவத்தையும் அடிப்படையாகக் கொண்டு விஞ்ஞானம், கணிதம் போன்ற துறைகளைத் தேர்ந்தெடுக்கின்றனர். இதன் விளைவாக உயர்தரப் பெறுபேறுகள் மிகவும் மோசமானதாக அமைந்து விடுகின்றது.

பாடசாலைகளில் இருக்கக்கூடிய குட்டிக் கௌரவத்திற்காக விஞ்ஞான, கணிதத்துறைகளில் கல்வி கற்று, இறுதியில் சித்தியின்மை என்ற சான்றிதழுடன் பாடசாலை வாழ்வை முடித்துக் கொள்ளும் பரிதாபநிலையைத்தவிர்க்க - தடுக்க மாணவர்களுக்குப் போதிய விளக்கமும், வழிகாட்டலும் தேவையாகவுள்ளது.

பத்துப் பாடங்களில் அதிவிசேட சித்தி பெற்ற மாணவர்கள் வர்த்தகம் அல்லது கலைத்துறைகளைத் தெரிவுசெய்யக்கூடாதென்ற நினைப்பைக் கொண்டுள்ளனர். இது முற்றுமுழுதும் தவறான நிலைப்பாடாகும்.

பத்து 'ஏ' பெற்ற மாணவர்கள் கலை, வர்த்தகத் துறையைத் தேர்ந்தெடுப்பார்களாயின் அவர்கள் எதிர்காலத்தில் தலைசிறந்த பேராசிரியர்களாக, புகழ்பெற்ற சட்டத்தரணிகளாக, நீதிபதிகளாக, கணக்காளர்களாக, நிர்வாகிகளாக, நியாயத்துவம் மிக்க அரசியல்வாதிகளாக மிளிர்வார்கள் என்பது நிறுதிட்டமான உண்மை.

எனவே, சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் உயர்தரத்தில் தமக்கான கற்றல் துறையை நிதானமாகச் சிந்தித்து எதிர் காலம் சிறப்படையும் வகையில் தெரிவுசெய்யவேண்டும்.

மீள் மதிப்பீடு செய்யப்பட்ட விடைத்தாள்கள் விரைவில் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படும்

அநுர எதிரிசிங்க தெரிவிப்பு

கல்விப் பொதுத்தராதர பத்திர உயர் தரப் பரீட்சை மாணவர்களின் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட விடைத்தாள்கள் புது வருடத்திற்கு முன்னர் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

மீள் மதிப்பீடு சம்பந்தமான 5ஆயிரம் விண்ணப்பங்களில் பெரும் பாலானவைபூர்த்திசெய்யப்பட்டுள்ளன. புள்ளிகளில் வித்தியாசம் காணப்படுமானால் அத்தகைய விடைத்தாள்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் மீள் பரிசீலனைக்கென அனுப்பி வைக்கப்படும்.

ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தகவல் தருகையில், மீள் மதிப்பீட்டு பெறுபேறுகள் பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு வாரத்தில் வெட்டுப் புள்ளிகள் பற்றிய விபரங்கள் வெளியிடப்படும் என்று கூறினார்.

பல்கலைக்கழகங்களுக்கு 19ஆயிரத்து 650 மாணவர்கள்சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்என்றுதாம் எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-7)

பதவிகளை அடிப்படையாகக் கொண்டு பாதுகாப்பை தீர்மானிக்கக் கூடாது - ஐ.தே.க.

ஒருவரின் பதவிகளை அடிப்படையாகக் கொண்டு அவருக்கான பாதுகாப்புக் குறித்து அரசாங்கம் தீர்மானிக்கக் கூடாதெனத் தெரி வித்திருக்கும் ஐக்கிய தேசியக்கட்சி ,அந்த நபருக்குக் காணப்படும் அச்சுறுத்தல்களைக் கொண்டே அவருக்கான பாதுகாப்பைத்தீர் மானிக்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ர்வூப் ஹக்கீமின் பாதுகாப்பைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபர் நீதிமன்றத் திடம் மனுவொன்றைச் சமர்ப்பித் திருந்தார். இது குறித்து எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவிய லாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல, கட்சியின் தலைவர் என்ற ரீதியில் ரவூப் ஹக்கீமுக்குப் பாதுகாப்பை அதி கரிப்பது அவசியமானது எனக் கூறியதுடன், ஹக்கீமின் பாதுகாப்பைக்குறைப்பதற்கு அரசாங்கம் முயற்சிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாதெனவும் கூறினார்.

ரவூப் ஹக்கீமுக்கு நீண்ட கால மாகவேபாதுகாப்பு அச்சுறுத்தல் இருந்து வருகிறது. அவர் அமைச்சுப் ப்தவியிலிருந்து விலகியதைத் தொடர்ந்து அவரின் பாதுகாப்பை குறைப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது என கிரியல்ல குறிப்பிட்டார்.

ஒருவரின் பதவியைப் பார்த்து அவருக் கான பாதுகாப்பை அரசாங்கம் தீர்மானிக்கக் கூடாது. அவருக்கு இருக்கும் அச்சுறுத்தலைப் பொறுத்தே பாதுகாப்புப் பற்றி தீர்மானிக்க வேண்டும். கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஹக்கீம் போட்டியிடும்நிலையில் அவருக்கான பாதுகாப்பைக் குறைத்து தேர்தல் பிரசாரப் பணிகளை மந்தமடையச் செய்யும் திட்டத்திலேயே அவரின் பாதுகாப்பைக் குறைப்பதற்கு அரசாங்கம் நீதி மன்றம் சென்றுள்ளது. எனினும், நீதி மன்றம் மீது நாம் மிகுந்த நம்பிக்கை கொண்டிருப்பதால் ஹக்கீமின் பாதுகாப்புக் குறித்து நீதிமன்றம் .சரியான தீர்ப்பை வழங்கும் என்றும் ஊடகவியலாளர் மாநாட்டில் லக்ஷ்மன் கிரியல்ல சுட்டிக்காட்டினார்.

தேவையானவர்களுக்குப் பாதுகாப்பை வழங்காமல் ஜனாதிபதிக்கும், அரசாங்கத் துக்கும் வேண்டப்பட்ட எந்த விதமான பதவி களையும் வகிக்காதவர்களுக்கு அதிகரிக்கப்பட்ட பாதுகாப்பு வழங்கப்படுகிறது எனத் தெரிவித்த ஐக்கிய தேசியக்கட்சி, இது எந்தச் சட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படுகிறது எனக் கேள்வியெழுப்பியுள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தியாகராஜா மகேஸ்வரனின் பாதுகாப்பை அரசாங்கம் குறைத் தமையாலேயே அவர் சுட் டுக்கொல்லப்பட்டதாக லக்ஷ்மன் கிரியல்ல கூறினார்.

அத்துடன் கிழக்கு மாகாணத் தேர்தலில் போட்டியிடும் பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் ஆயுதங்களை அரசாங்கம் களையாமல் இருப்பது ஏன் எனவும் ஊடகவியலாளர் மாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல கேள்வியெழுப்பினார். (அ)

விஞ்ஞானப் பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம்

(கொழும்பு)

2005-2007ஆம் ஆண்டுகளில் விஞ்ஞானப் பிரிவு கற்கை நெறிகளில் டிப்ளோமா பட்டம் பெற்றவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த இதற்கான பிரேரணையை முன்வைத் திருந்தார். மூன்று மொழிப்பட்டதாரிகளுக்கும் இந்தநியமனம் வழங்கப்படும்.(அ-5)

50 ஆயிரம் பேருக்கு ஆங்கிலக் கல்வி போதனை

(கொழும்பு)

இலகுவாக தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் 50ஆயிரம் பேருக்கு துரித ஆங்கிலக் கல்வி போதனைத் திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங் கியது.

இதற்கான பிரேரணையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்வைத் திருந்தார். ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் ஒத்துழைப்புடனும் தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடனும் இத் திட் டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும். 18-24 வயதுக்குட்ட வர்களே இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது. (அ-5)

பொறியியலாளர்கள் சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன இறக்குமதிக்கு அங்கீகாரம்

(கொழும்பு)

அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளில் பணிபுரியும் பொறியியலாளர்களுக்கு சலுகை அடிப்படையில் மோட்டார் வாகனங்கள் இறக்குமதி செய்துகொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

இதற்கான பிரேரணையை அமைச்சர் களான ஏ.எல்.எம்.அதாவுல்லாஹ், ஜெயராஜ் பொனாண்டோ புள்ளே, சமல் ராஜபக்ஷ ஆகியோர் கூட்டாக முன்வைத்திருந்தனர். இதன்படி இடைநிறுத்தி வைக் கப்பட்டிருந்த இந்த நடைமுறை மீண்டும் அமுலுக்கு வரும். (அ-5)

ஓலைச் சுவடிகள் 08

தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

காலையில் சூரிய நமஸ்காரம் செய்வது எதற்கு?

தொன்று தொட்டே எம்முன்னோர் பின்பற்றிவந்த ஓர் ஆசாரமுறை சூரிய நமஸ்காரம்–உடல் மற்றும் மனது உறுதியடையவும் அமைதிய டையவும் உதவும் ஆசாரமிது. இதை விதிமுறைகளின் படி செய்யும் போது உடற்பாகங்களில் ஆற்றலும் சக்தியும் வருகின்றது. மேற்கத்தேய நாடுகள் உட்பட உலகின் எல்லா பாகங்களிலும் இந்த ஆசாரமுறை பிரசித்தி பெற்றிருக்கின்றது. ஜிம்னாஸ்டிக்ஸ், சண்பாத் என்ற பெயர்களில், சூரிய நமஸ்காரத்தை உட்படுத்திய உடற்பயிற்சிகள் செய்து வருகின்றனர்.

சூரியநமஸ்காரம் வாயிலாக நமது உடலிலுள்ள எல்லா மூட்டுகளுக்கும் அசைவு ஏற்படுகின்றது. சரும்த்தில் விற்றமீன் டியை உற்பத்தி செய்யும் திறன் காலை சுரிய ஒளிகதிர்களுக்கு உண்டு. கல்சியம் உற்பத்தியைக் கட்டுப் படுத்தும் திறனும் உண்டு என்பது அறிவியல் துறையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும் உடலுறுப்புக்கள் உறுதி பெறுவதால் காசநோயணுக்களின் ஆக்கிரமிப்பையும் தடுக்கின்றது. தொடர்ச்சியாகசூரியநமஸ்காரம்செய்யும் போது அகால வயது முதிர்ச்சி ஓரளவுக்கு தடைசெய்யப்படுகின்றது. மூட்டுக்கள் நல்ல லாவக மடைகின்றன. தொப்பை வயிறு வருவதை கட்டுப்படுத்த இயல்கின்றது. மனதுக்கும்உடலுக்கும் உற்சாகம் ஏற்படவும் சூரிய நமஸ்காரம் உதவுகின்றது.

சூரிய நமஸ்காரம் செய்பவர்கள் ஆரம்பத்தில் அனுசரிக்க வேண்டிய சில விஷயங்களைப் பார்ப்போம். அதாவது, பரிசுத்தமான எளிய வாழ்க்கை வாழ வேண்டும். அளவான உணவு அருந்த வேண்டும். குளிர்ந்த தண்ணீரால் குளிக்க வேண்டும். விசாலமானதும் தூய்மையானதும் காற்றோட்டமுள்ளதுமான இடத்தில் நமஸ்காரம் செய்ய வேண்டும். நமஸ்காரம் செய்யும்போது தளர்ந்த ஆடை அணியவேண்டும். தேநீர், கோப்பி, கொக்கோ, புகையிலை என்பவற்றை விலக்க வேண்டும். மேற்படி விஷயங்களை கவனித்து சூரிய நமஸ்காரத்தை ஆரம்பித்தல் வேண்டும்.

வவுனியாவில் கைக்குண்டு வீச்சு

வவுனியாவில் இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இடம்பெற்றிருப்பதாக தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக நிலையம் அறிவித்துள்ளது.

கடந்த 24 மணித்தியாலங்களில் வவுனியா, யாழ்ப்பாணம், மணலாறு ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற மோதல்களில் 21 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டிருப்பதாக நேற்று மாலை தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

இந்த மோதல்களில் 4 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் அந்த ஊடக நிலையம் தெரிவித்துள்ளது. (ச-5)

அரசாங்கத்தின் பரிந்துரைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி பூரண ஆதரவு

இலங்கை புடைவைக் கைத்தொழில் பிரிவிற்காக 1978 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பை மறுசீரமைப்பதற்கு அரசாங்கத்தினால் முன்வைக்கப்படுகின்ற பரிந்துரைகளுக்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி பூரண ஆதரவை வழங்கும் என்று தெரிவித்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க ஜரோப்பிய ஒன்றியத்துக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பாக சர்வதேச கொள்கைக்கேற்ற வகையில் அரசியல் அமைப்பில் தேவையான வகையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும். உயர் நீதிமன்றத் தீர்ப்பிற்கு அமைவாகவே இந்தப் பரிந்துரைகள் தேவைப்படுகின்றது. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பாக சர்வதேச கொள்கை உள்ளிட்ட உரிமைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

மரண அறிவித்தல்

திரு.தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம்

(யாழ்.கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளரும் (முன்பள்ளி), இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளரும், அரியாலையின் பல்வேறு சமூக அமைப்புக்களின் முக்கிய உறுப்பினரும்)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம் அவர்கள் 03.04.2008 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை மாரிமுத்து தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் வறுத்தலை விளான் தெல்லிப்பழையைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லத்துரை பாக்கியம் தம்பதியரின் மருமகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் வரகுணன் (கொழும்பு திறந்த பல்கலைக்கழகம்), ஹரிகரன், மதுரதன் (மாணவன், யா/பரியோவான் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகேஸ்வரி, பாலசுப்பிரமணியம் (கொழும்பு), தியாகலிங்கம் (நோர்வே), சரஸ்வதி, கோசலாதேவி, யோகாதேவி (நோர்வே), சோதிலிங்கம்(நோர்வே) மற்றும் மகாலிங்கம் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும்,

பேரம்பலம், காலஞ்சென்ற செல்வராசா மற்றும் சிவபாலசிங்கம்(யாழ்.போதனா வைத்தியசாலை), குணதாசன்(நோர்வே), யோகம்மா(கொழும்பு), சந்திராவதி (நோர்வே), தவமலர்(நோர்வே), புஸ்பராணி(கனடா), விநாயகதாஸ், செந்தில்நாதன் (டோகா), சத்திவேல் (கனடா), குணதாசன் (டோகா), விஜயலட்சுமி, வசந்தாதேவி, லலிதாதேவி (கனடா), பத்மாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,

அமரர்களான கந்தையா (மணியம் மாஸ்டர்), பரமசாமி(சங்கீத பூசணம்), தர்மலிங்கம் மற்றும் நடராசா ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற அன்னலட்சுமியின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 06.04.2008 ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாண கல்வி வலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தகனக் கிரியைக்காக காலை 11 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை அனைத்து உள்ளங்களும் ஏற்றுக் கொள்ளவும்.

40/2, கலைமகள் வீதி, அரியாலை. (ச-959)

தகவல்; குடும்பத்தினர்.

அறிவித்தல்



தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம்

(சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்)

06.04.2008 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அன்னாரின் கலைமகள் வீதி,அரியாலை இல்லத்தில் நடைபெறும் இறுதிக் கிரியைகளிலும் இறுதி ஊர்வலத்திலும் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விச் சமூகம், முன்பள்ளி ஆசிரியர்கள், தொழிற்சங்க உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், யாழ்ப்பாணம்.

(ச-961)

சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு

Sale ! Sale ! மாபெரும் மலிவு விற்பனை ! Sale ! Sale !

(25.3.2008 முதல் - 14.4.2008 வரை)

அனைத்துப் புடைவைகளுக்கும் கழிவு வழங்கப்படும். ரெடிமேட் ஆடைகளுக்கு விசேட கழிவு விலையில் வழங்கப்படும்.

புதுவருடத்தை முன்னிட்டு எதிர்வரும் சனி,ஞாயிறு விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்.

லைடனி புடைவை நிலையம்

410, ஆஸ்பத்திரி வீதி (பஸ்நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

(சி-934)

ரஹீவ் ஹக்கீமின்...

தொடர்பாகப் புதிய அறிவித்தல் எதனையும் விடுக்கவில்லை.

பரீதுகாப்பைக் குறைப்பதற்கு அரசாங்கம் எடுத்த இந்த நடவடிக்கை ஹக்கீமின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருந்தால் அவர் அடிப்படை மனித உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்ய முடியும் என நீதியரசர் சரத் என். சில்வா தெரிவித்துள்ளார். (ச-2,5)

கட்சி அங்கத்...

மத்திய குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு முரணாக விமல் வீரவன்ச கருத்துக்கள் தெரிவித்ததையடுத்தே அவரை கட்சியின் அங்கத்துவத்திலிருந்து இடை நிறுத்து வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

பாலமோட்டையில்...

இடம்பெற்றுள்ளன. நேற்றுக் காலை படையினர் விடுதலைப்புலிகளின் நிலைகளை நோக்கி இலகு இயந்திரத்துப் பாக்கிகள், ஆர்.பி.ஜி.போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தி மேற்கொண்ட தாக்குதல் 20 நிமிடங்கள் வரை நீடித்தது.

இத் தாக்குதலில் இரு தரப்பினரும் சரமாரியான மோட்டார்த் தாக்குதலை மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

மனிதாபிமான...

வெளியேறியுள்ளமை, தேவாலயத்தைப் பாதுகாப்பது தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்தோடு மன்னார் கட்டுப்பாடற்ற பகுதியில் இடம் பெயர்ந்து வாழும் சுமார் 15 ஆயிரம் பொதுமக்களின் அடிப்படை மனிதாபிமானத் தேவைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாவும் தெரிகின்றது.

இச் சந்திப்பு நடைபெற்றதை உறுதிப்படுத்திய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பதில் பேச்சாளர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கும் மன்னார் ஆயருக்குமிடையிலான வழமையான சந்திப்பே இதுவென தெரிவித்தார்.

இதன்போது பிரதேசத்தின் பொதுவான நிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடப் பட்டதாகவும் இடம் பெயர்ந்த மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாகவும் தெரிவித்தார். (ச-5)

முகமாலையில்...

6.20 மணிக்கும் 6.40 மணிக்கும் விமானப் படையினர் தாக்குதல் நடத்தியதாக விமானப் படைப் பேச்சாளர் விங் கொமாண்டர் அன்ரு விஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இவ் விமானத் தாக்குதல் இலக்கினை அவதானித்து மேற்கொள்ளப்பட்டதாகவும் இவ்வான் தாக்குதலில் விடுதலைப்புலிகளின் பயிற்சி முகாம் முற்றாகச் சேதமடைந்துள்ளதாகவும் பாதுகாப்பு-அமைச்சகம் தெரிவித்துள்ளது. (ச-5)

முருங்கன்...

இதில் பொலிஸார் பலர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் இவ் எறிகணைத் தாக்குதலில் காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் முருங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இவ் எறிகணைத் தாக்குதலினையடுத்துக் குறித்த பகுதியில் பாதுகாப்புப் படையினர் தேடுதல் மேற்கொண்டதாகவும் மன்னார்ச் செய்திகள் தெரிவித்தன. (ச-5)

ஐ.தே.க. எம்.பி...

ஐக்கிய தேசியக் கட்சியில் தொடர்ந்தும் இருப்பது அரசியல் தற்கொலைக்கு ஒப்பானது என்று கருதுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

தற்போதைய அரசாங்கம் மிகப் பலமானதாகவும் உறுதியானதாகவும் இருப்பதால் எதிர்வரும் 2010 ஆம் ஆண்டே பொதுத் தேர்தல் நடைபெறும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

எனவே ஐக்கிய தேசியக் கட்சியில் தொடர்ந்து நீடிப்பது அவர்கள் அரசியலைத் தொடர முடியாத வங்குரோத்து நிலைக்கு இட்டுச் சென்று விடும் என்றும் அதன் காரணமாகவே மேலும் 10 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தில் இணைவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ச-5)

மருவிலிருந்து உடனடியாக விலகுமாறு...

அவர் மேலும் கூறியதாவது,மடுப் பகுதியில் இடம் பெறும் மோதல்களை இரண்டு தரப்பினரும் நிறுத்தி அப் பகுதியிலிருந்து உடனடியாக விலகிச் செல்ல வேண்டும். இராணுவத்தினர் மடுத் தேவாலயப் பகுதிக்கு வருவதற்குப் பெரும் எடுப்பிலான படை நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு விடுதலைப்புலிகள் மடு மாதா தேவாலயச் சூழலில் காணப்படுகின்றனர். இராணுவத்தினர் மடுத் தேவாலயத்தை நோக்கிய படை நடவடிக்கையை மாற்றியமைத்தால் விடுதலைப் புலிகள் தேவாலயப் பகுதியிலிருந்து விலகுவதாக உறுதியளித்துள்ளனர் என ஆயர் தெரிவித்தார்.

மடுப் பகுதியில் இரு தரப்பினரும் மோதலில் ஈடுபடுவதன் மூலம் மடு மாதா தேவாலயத்தின் அடிப்படை அமைப்புக்கள் மற்றும் கட்டடங்கள் சிதைவடையும் நிலை ஏற்பட்டுள்ளது. அரசாங்கத்திடம், மோதல்கள் இடம்பெற்றால் இவ்வாறான பாதிப்புக்கள் ஏற்படும் என கடந்த ஒரு வருடத்திலிருந்து கோரிக்கையை விடுத்து வருகின்றோம்.

இந்தப் பகுதியை சமாதானப் பிரதேசமாக எழுத்து மூலம் தருவதன் மூலம் இந்த எல்லைப் பகுதியிலிருந்து விடுதலைப்புலிகளை அகற்றிப் பொதுமக்களைக் குடியமர்த்த நடவடிக்கை எடுப்பதாக அரசாங்கத்திடம் கூறியதாகவும் அவர் கூறினார்.

கடந்த வருடம் சித்திரை மாதம் முதல் இக் கோரிக்கையைத் தெரிவித்து வந்ததாகவும் இது தொடர்பாக ஜனாதிபதியிடம் கேட்டபோது, மடுத் தேவாலயப் பிரதேசத்தை சமாதானப் பிரதேசமாக்க எழுத்துமூலம் தருவதாகக் கூறியபோதிலும் தரவில்லை என்றும் ஆயர் மேலும் கூறினார். (ச-2)

கிறிஸ்தவ மக்களின் புனித தலத்தை...

போர் செய்யாது தவிர்க்கப்பட வேண்டிய இந்தப் பகுதி மீது எந்தவிதக் கட்டுப்பாடுகளுமின்றி தனது இராணுவத்தை ஏவிவிட்டிருக்கும் அரசின் இச் செயலை புலிகள் இயக்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

இடம்பெயர்ந்த பல்லாயிரக் கணக்கான மக்களின் பாதுகாப்பிடமாகவிருந்து வரும் மடு புனித ஆலயப் பகுதியைப் போர்க்களமாக மாற்றியுள்ள சிங்கள அரசின் செயல் காட்டுமிராண்டித்தனமானது.

1999இல் மடு ஆலயப் பகுதிக்குள் நுழைந்த சிங்களப் படைகள் தனது போர்த் தாங்கிகள் மூலம் நடத்திய குண்டுத் தாக்குதலில் ஆலய மண்டபத்துக்குள் தஞ்சமடைந்திருந்த குழந்தைகள், முதியோர்கள், பெண்கள் உட்பட 30ற்கும் அதிகமான தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

இதேபோன்று கடந்த 29.02.2008 அன்று மடு புனித வளாகப் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த பள்ளிச் சிறார்களின் பேருந்து மீது படையினர் நடத்திய கிளைமோர்த் தாக்குதலில் பள்ளிச் சிறார்களும் பொதுமக்களுமாக 18 பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

இவ்வாறு பொதுமக்களின் பாதுகாப்புக்கு ஆபத்தை விளைவித்து வரும் சிங்களப் படைகள் அந்த மக்கள் மீது மீண்டும் ஒரு அவலத்தை சுமத்தியுள்ளது. முன்னரைப் போன்று இப்போது மடு புனிதத் தலப் பகுதியை ஒரு இராணுவ வலயமாக்கச் சிங்கள அரசு முனைகின்றது.

பௌத்த மக்களின் மன அமைதி குறித்தும் பௌத்த மதத் தலங்களின் புனிதம் குறித்தும் அக்கறை செலுத்தும் இலங்கை அரசு ஏனைய மதங்களைச் சேர்ந்த மக்களின் அமைதியையும் புனிதத்தையும் புறந்தள்ளி விட்டு தனது இராணுவ நலனை முன்னிறுத்திச் செயற்படுவதனைக் கண்டிக்க அனைத்துலக நாடுகளும் மனித உரிமை அமைப்புக்களும் முன்வரவேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

நிரு ரீயூசன் சென்ரர்

கோண்டாவில்

O/L பகல் நேர வகுப்பு

Day Class

ஆரம்பம் :- 09.04.2008

(புதன் - 7 மணி)

வழமையான ஆசிரியர் குழு அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

(ச-962)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.04.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.